வாழைச்சேனையில் தனிச்சிங்களப்

## பெயர்ப்பலகைக்கு மை பூச்சு!

தனித் தமிழ்த்தொகுதியான கல்குடாத்தொகுதியிலுள்ள வாழைச்சேனை என்னும் ஊரில் மக்கள் வங்கிக் கிளையின் பெயர்ப்பலகை தனிச்சிங்களத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தது. இந்தத் தனிச்சிங்களப் பெயர்ப்பலகை கடந்த 4-6-75 முதல் மைபூசி அழிக்கப்பட்டிருக்கக் காணப்பட்டது. தனிச்சிங்களத்துக்கு தமிழ்ப் பகுதியில் இடம் கொடுத்தால் அதை தமிழ் இளைஞர்கள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதற்கு அது ஓர் உதாரணம்!


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை: சதம் 60. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2006, ஆனி 8, ஐ:ஆகிர்: 11 (22-6-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 47


# களத்திலே ஈழவிடுதலை முன்னணி வீரர்கள்! சிங்கள பௌத்த சோசலிசத்தின் முகமூடி கிழித்தெறியப்பட்டது மான்செஸ்டர் நகரில்!

## கிரிக்கெட் ஆட்டம் தடைப்பட்டது! எட்டு தமிழ் இளைஞர்கள் கைதாகினர்!

உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் ஆட்டத்தின் மூலம், உலக மக்களின் கண்களில் மண்ணைத்தூவி, ஸ்ரீலங்கா சிங்கள நாடு என்பதை வலியுறுத்தி விடவேண்டும் என்று பகீரதப் பிரயத்தனம் செய்த இலங்கை அரசின் சதித்திட்டங்கள் ஆரம்பநாளிலேயே முறியடிக்கப்பட்டன. ஆனி 7-ம் நாள் சிங்கள ஸ்ரீலங்கா கோஷ்டிக்கும், மேற்கு இந்திய கோஷ்டிக்கும் இடையில் நடந்த முதலாவது போட்டியிலேயே இலங்கை அரசின் இனவாதக் கொள்கை உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டது.

இங்கிலாந்தில் கல்விபயிலும் திரு. பத்மநாதனையும், திரு. பொன்னையாவையும் விளையாட்டுக்குழுவில் சேர்க்கப்போவதாக இலங்கைத் தமிழர்களையும், தமிழ் விளையாட்டுவீரர்களையும் ஏமாற்றிவந்து, தனிச் சிங்களவர் கோஷ்டியென பிரதிபலிக்க முற்பட்டவர்களைக்கண்டு, கொதிப்படைந்த ஈழவிடுதலை வீரர்கள் மைதானத்தில் புகுந்து ஆட்டத்தைத் தடைப்படுத்தினர். இதனால் மெய்கலங்கியுள்ள அரசையும், அதன் ஏவல் சக்திகளையும் தொடர்ந்தும் ஓவல் திடலிலும், Oval London, Trentbridge, Nottingham, திடலிலும் மானபங்கப்படுத்தி, இலங்கை அரசின் இனவொதுக்கல் கொள்கைகளை உலக அரங்கில் எடுத்துக்காட்டுவதென ஈழ விடுதலைப் படையினர் எடுத்துள்ள முடிவு, இங்கிலாந்தில் பரந்துவாழும் இலங்கையர்களிடமெல்லாம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனி ஏழாம் நாள் தமிழர் சரித்திரத்தின் புதிய அத்தியாயத்தில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய ஒரு பொன்னான நாள். கல்வி கற்க மட்டுமா வந்தோம், எம் கால் விலங்குகளை உடைத்தெறியவுமல்லவா காலடிவைத்தோம் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறியது இளைஞர்களின் துணிவான முயற்சி, இது விடுதலைப் போருக்கான முதல் முயற்சி.

திடல்வழிய மக்கள், திரண்டிருந்த பொலீசார், வெறிகொண்டிருந்த இரசிகர் கூட்டம், பத்திரிகை நிருபர்கள் வானொலி நிருபர்கள் இவர்களின் கவனத்தை ஸ்ரீலங்கா அரசின் இரும்புத்திரையுள் நடக்கும் இனவொதுக்கல் கொள்கையின் பக்கம் திருப்பவேண்டும். உலகமக்களுக்கு எடுத்துக்காட்டவேண்டும். விடுதலைக்கென்றே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களாலல்லாமல், வீணர்களால் முடியாது இக்காரியம்.

பரபரப்புடன் 10-45க்கு ஆரம்பமான விளையாட்டுப் போட்டி சில நிமிடங்கள் நடந்தேறிவிட்டது. விளையாட்டு இரசிகர்கள் மிகவும் ஆர்வமுடன் காணப்படுகிறார்கள். பார்வையாளர் கலரியில் இருந்து ஆதரவுக் கோஷங்கள் எழுந்தவண்ணம் இருக்கின்றது. பொலீசார் குழப்பங்கள் தோன்றுவண்ணம் உசாராக உலா


— 4-ம் பக்கம் பார்க்க


## கிளிநொச்சியில் தமிழர் கூட்டணி கொள்கை விளக்கக் கூட்டங்கள்!

இம்மாதம் 22ந் திகதி காலை கிளிநொச்சித் தமிழர் கூட்டணி — தமிழ் இளைஞர் பேரவையின் கூட்டுக் கருத்தரங்கு திரு. வீ. ஆனந்தசங்கரி பா. உ.வின் இல்லத்தில் அவரது தலைமையில் நடைபெறும். கவிஞர் காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, கூட்டணிசெயலாளர் நாயகம் நாவலர் அ. அமிர்தலிங்கம், தமிழ் மகளிர் பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் கருத்தரங்கில் உரை நிகழ்த்துவர்.

அன்று மாலை பரந்தனை அடுத்துள்ள குமரபுரம் சந்தைமைதானத்தில் சிறை மீண்ட தமிழ் இளைஞர்கள் அனைவருக்கும் தந்தை செல்வாவுக்கும் பொது வரவேற்பு அளிக்கப்படும் இக் கூட்டத்தில் கூட்டணித்


—5-ம் பக்கம் பார்க்க


## 'இலங்கையைதுண்டாடுவதற்கு வெளி நாடுகளின் உதவியை தமிழர்கோரும் நிலைதோன்றுமா?'

### 'On Looker' இந்திய ஆங்கில சஞ்சிகையின் கேள்விகள்!

"இலங்கைத் தமிழர்கள் என்றுவது சுதந்திர மக்களாக வாழ முடியுமா? இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு முற்றுப் புள்ளிவைக்குமா? அல்லது செல்வநாயகங்கள் இலங்கையை இரண்டாகத் துண்டாடுவதற்கு வெளி நாடுகளிலுள்ள தமது நண்பர்களிடம் உதவி கோரவேண்டிய நிலை ஏற்படுமா? இலங்கையிலுள்ள தமிழர்கள் அங்குபடும் துன்பத்தைப் போக்குவதற்கு எதுவுமே செய்ய முன்வராத இந்திய அரசாங்கம், இந்திய நாட்டுத் தமிழர்களிடமிருந்து விசுவாசத்தை எதிர்பார்க்க முடியுமா? அல்லது இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் சித்திரவதைக்கு முடிவே கிடையாதா?"

—இவ்வாறு இந்தியாவிலிருந்து வெளிவரும் 'On looker' என்ற ஆங்கில சஞ்சிகை இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது. இரண்டு பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ள இக்கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

"இலங்கையில் தமிழருக்கு எதிராக நடைபெற்றுவரும் சித்திரவதை இந்தியத் தமிழர்களான நாடற்றவர்களுடன் மட்டும் நிற்கவில்லை.


—5-ம் பக்கம் பார்க்க




மூன்றாண்டுகள் தமிழ் இனத்துக்காக சிறையிலிருந்து விட்டு விடுதலையாகி யாழ்ப்பாணம் சென்றிருந்த வீர இளைஞர் வண்ணை ஆனந்தனை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் அவரது சகோதரி பாசத்துடன் வரவேற்ற உருக்கமான காட்சி! —படம்: ஏ. வி. மகாலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 அம்சத்திட்டம் ஒருமுறைக்கு இருமுறை 'படுகொலை' செய்யப்பட்ட பரிதாப வரலாறு!

**பன்னிரண்டு அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய ஒருமைப் பாட்டை உருவாக்குவதற்காக சிங்கள ஏகாதிபத்தியத்தின் வால் பிடிகளான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் சென்ற மாத இறுதியில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் அரங்கேற்றிய துரோக நாடகமான மகா நாட்டில் பங்கு பற்றவோ தொடக்கி வைக்கவோ முடியாது என ஜனாதிபதியும், பிரதமரும் மறுத்துவிட்ட செய்தி 1-6-75 சுதந்திரனில் வெளியாகியிருந்தது,**

## தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை திரைமறைவில் விலைபேசி விற்ற துரோக நாடகம்!

நாம் அறிவித்தது போல மகாநாட்டை ஆரம்பித்து வைக்க முடியாதென்று ஜனாதிபதி செருப்பால் அடித்த மாதிரி முற்போக்குகளுக்கு கூறிவிரட்டியடித்து விட்டாராம். பிரதமரும் வருவாரோ வரமாட்டாரோ என்று இறுதி நிமிடம்வரை முற்போக்குகள் வயிறு கலங்க காத்திருந்த பின், சுமார் மூன்று மணி நேரம் தாமதமாக பிரதமர் வந்து வேண்டா வெறுப்பாகப் பேசிக்விட்டுச் சென்றாராம்.

இறுதி நேரத்தில் சிறிமா அம்மையார் எழுந்தருள திருவுளம்கொண்டமைக்கு காரணம் என்ன? இதன் பின்னால் இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழ் பேசும் பிரஜையும் வெட்கித் தலை குனிய வேண்டிய அளவு துரோக நாடகம் ஒன்று இடம் பெற்றதாம். எட்டப்பன், காக்கை வன்னியனையே மிஞ்சக்கூடிய இக் கழுத்தறுப்பு நாடகத்தில் முற்போக்கு ஞானசூனியம் ஒன்று பிரதமபாத்திரம் வகித்ததாம்.

### 'ஒரிஜினல்' திட்டம்!

தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கவென இம்முற்போக்கு துரோகிகள் தயாரித்த ஒரிஜினல் பன்னிரண்டு அம்சத் திட்டத்தையும், சிங்கள—பௌத்த ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளின் கால்களில் இத்திட்டத்தை காலத்துக்கு காலம் வைத்து ஒரிஜினல் திட்டத்தை சின்னாபின்னப்படுத்திய பச்சை துரோகத்தையும் உடைத்து அம்பலத்தில் தமிழ்மக்களின் முன் நிறுத்துவது எமது கடமை.

முற்போக்குகள் முன் வைத்த 'ஒரிஜினல்' பன்னிரண்டு அம்சத்திட்டம் இது தான் (ஜனவரி 1974ல் வெளியான முற்போக்கு எழுத்தாளர் சங்க ஏடான "புதுமை இலக்கியம்" இதழ் 16இலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது):-

(1) நாட்டின் ஒருமைப்பாடும் தேசிய முழுமையும் மீறப்பட முடியாதவை என்பதை அனைவரும் ஏற்பதுடன் தமிழ் மக்களினது தனித்துவத்தை உத்தரவாதப்படுத்துவது.

(2) சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் நியாயமான அபிலாஷைகளை இரு பகுதியினரும் ஏற்றுக்கொள்வது.

(3) மொழிப் பிரச்சினைக்கான நிர்வாக அரசகரும மொழிச் சட்டத்தையும் தமிழ் மொழிகள் விசேஷ விதிகள் சட்டத்தையும் இரு பகுதியினரும் ஏற்பது.

(4) சிங்களம் அரசகரும மொழி என்ற சட்டத்தை தமிழ் மக்களுக்குப் பாதகமில்லாத விதத்திலும், தமிழ் மொழி விசேஷ விதிகள் சட்டத்தை சிங்கள மக்களுக்குப் பாதகமற்ற வகையிலும் நேர்மையாக அமுல்படுத்துவதுடன் மொழிச் சட்டங்களை அமுல்படுத்தும்போது அரசாங்க ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படக் கூடிய கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் முடிந்தளவில் குறைக்க உசிதமானவற்றைச் செய்வது.

(5) அரசாங்கத்துடனும், அரசாங்க அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள், பொலீஸ் நிலையங்கள் முதலானவற்றுடனும் தமிழ் மக்கள் தமது அலுவல்களைத் தமது மொழியில் ஆற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை நடை-முறையில் முழுமையாக உத்தரவாதம் செய்வது.

(6) அவ்வப் பகுதிகளின் விவகாரங்களை நிர்வகிப்பதில் பங்குகொள்ள வசதி அளிப்பது என்ற ஜனநாயகக் கோட்பாட்டைச் செயல் படுத்துவதற்கான உகந்த நிர்வாக அமைப்புகளை உருவாக்குவதுடன் ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகார எல்லையை விஸ்தரிப்பது.

(7) தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கட்டுக்கோப்புக்குள் பிரதேச பொருளாதார அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கவும், இவற்றின் நிர்வகிப்பில் பங்கெடுக்கவும், இத்திட்டங்களில் பிரதேச மக்களுக்கே முதலிடம் கொடுக்கவும் ஆவன செய்வது.

(8) தமிழ்ப் பிள்ளைகள் தமது தாய்மொழியில் எல்லாமட்டங்களிலும் கற்பதற்கான உரிமையை மீற முடியாத வகையில் உத்தரவாதப்படுத்துவது.

(9) உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளில் திறமையையும் பின் தங்கிய பகுதிகளுக்கு ஊக்குவிப்பு அளிப்பதையும் அடியாதாரமாகக்கொள்ளும் கோட்பாட்டை கருராகக் கடைப் பிடிப்பதுடன் வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக் கழக வளாகங்களை அமைத்து தமிழ்பேசும் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவது.

(10) தமிழ் மக்களின்கலைகளையும் இலக்கியங்களையும் கலாசாரத்தையும் வளர்க்க அனைத்து உதவிகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குவதுடன், தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் நல்லுறவையும் நல்விளப்பத்தையும் வளர்க்க தமிழ் இலக்கியப் படைப்புகளைச் சிங்களத்திலும் சிங்கள இலக்கியப் படைப்புகளைத் தமிழிலும் மொழியாக்கம் செய்து வெளியிடுவது ஆகியவற்றின் மூலம் கலாசார பரிவர்த்தனையை ஏற்படுத்துவது.

(11) இன, மத,. சாதி போன்ற காரணங்களுக்காக உத்தியோகம், பதவியுயர்வு மற்றும் விவகாரங்களில் அவ்வப்போது ஏற்படக் கூடிய பாகுபாடுகளையும் ஒதுக்குதல்களையும் முற்றாக நீக்குவதுடன், தமிழ் மக்களின் நலன்களோடும் சம்பந்தப்பட்ட அமைப்புகளில் தமிழ் மக்களுக்கு உரிய இடம் அளிக்கப்படுவதை உத்தரவாதப்படுத்துவது.

(12) இன, மத ரீதியான குரோதங்களைத் தூண்டுவதை கடும் தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்துவத.

### அந்தரங்கம் என்ன?

இந்த பன்னிரண்டு அம்சத் திட்டத்தை அரசாங்கத்திடம் கொடுத்து செயல் வடிவம் பெறச்செய்ய மகா

## முற்போக்குகளின் "வெறுமைப்பாட்டு" மாநாட்டில் நடைபெற்ற தில்லுமுல்லுகள்!

நாடு கூட்டுவதற்கு பணம் வேண்டும் என்று கூறி, நாடெங்கும் சென்று தமிழ் வர்த்தகர்களிடமும் பிரமுகர்களிடமும் பணம்சேர்த்தனர் முற்போக்கு சங்கத்தினர். பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தையே இத்திட்டம் அடியொற்றி அமைக்கப்பட்டிருப்பதாக இவர்கள் கூறியதை நம்பி தமிழ் பேசும் மக்களும் தமது பணத்தை வாரி இறைத்தனர்.

மகாநாட்டை நடத்தியவர்களின் அந்தரங்கநோக்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதல்ல.. இலங்கையின் தமிழ்பேசும் சமுதாயமே தாமாக ஒருங்கு திரண்டு, எழுந்து, பங்கு பற்றி, வரலாறு படைத்த அகில-உலக தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு போட்டியாக தாமும் எதையாவது நடத்தி சிங்கள பாசிச அரசுக்கு விசுவாசமுள்ள அடிமைகளாக தம்மைக்கொள்வது இவர்களது ஒரு நோக்கம்.

பண்டாரநாயக்கா மண்டபத்தில் மகாநாட்டை நடத்தி ஜனாதிபதி, பிரதமர், ஏனைய அமைச்சர்களை திலப் பாவாடை விரித்து விழுந்து வணங்கி வரவேற்று மகாநாட்டை நடத்தி ஏரிக்கரை, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கலாச்சார நிறுவனங்கள் போன்ற அமைப்புக்களில் பதவிகளை சுவீகரித்துக்கொள்ளவேண்டும் என்பது இன்னொரு நோக்கம்.

### சூரியாராச்சியிடம் சாஷ்டாங்கம்

பிரதமரை அழைப்பதெப்படி? எவர் எவரையோ எல்லாம் காக்காய் பிடித்து சுதந்திரக் கட்சிசெயலாளரான அரை மந்திரி சூரியாராச்சியிடம் சென்று, 12 அம்சத் திட்டத்தை அவரது காலில் வைத்து, சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி பிரதமரை அனுப்பி வைக்கும்படி மிகுந்த பயபக்தியுடன் முற்போக்குகள் கேட்டுக்கொண்டதுகளாம். பிரதமர் வருவதானால் 12 அம்சத் திட்டத்தை தான் கூறுவது போல் மாற்றியமைக்க வேண்டும் என்று சூரியாராச்சி கண்டிப்பாக கூறிவிட்டாராம். எதையாவது வெட்டுங்கள், எதையாவது மாற்றுங்கள், எங்களுக்கு கவலையில்லை, சிறிமா அம்மையார் எழுந்தருளினால் அதுவே எங்களுக்கு போதும் என்று முற்போக்குகள் வாலைக் குழைத்து நின்றனவாம்.

### முதலாவது சூறை!

சூரியாராச்சி சூறையாடிய 12 அம்சத்திட்டம் எப்படி உருச்சிதைந்தது என்று பார்ப்போம் (12 அம்சதிட்டத்தின் "புதிய பதிப்பு" கம்யூனிஸ்ட் ஏடான "போர்வார்ட்"டில் 26-4-75ல் ஆயுட் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியாகியிருந்தது. அதிலிருந்து இது எடுக்கப்படுகிறது):-

முதலாவது அம்சத்தில் "தமிழ் மக்களினது தனித்துவத்தை உத்தரவாதப் படுத்துவது" என்ற வார்த்தைகள் வெட்டி எறியப்பட்டு விட்டன. அதற்கு பதிலாக முதலாவது அம்சம் பின்வருமாறு உருச்சிதைக்கப்பட்

தமிழ் நேசன்

டது:- நாட்டின் ஒருமைப்பாடும் தேசிய முழுமையும் மீறப்பட முடியாதவை என்பதை இரு தரப்பினரும் ஏற்பதுடன் சகல மக்களினதும் தனித்துவத்தை உத்தரவாதப்படுத்துவது."

நான்காவது அம்சத்தில் "தமிழ் மொழி விசேஷ விதிகள் சட்டத்தை சிங்கள மக்களுக்கு பாதகம் அற்ற வகையில் அமுல் படுத்துவது" பற்றிய வாக்குறுதி அகற்றப்பட்டு விட்டது. உருச்சிதைத்த

—7-ம் பக்கம் பார்க்க.

## மூலம்

தமிழென் அன்னை! தமிழென் தந்தை!
தமிழ் என்றன் உடன் பிறப்பு!

தமிழென் மனைவி! தமிழென் பிள்ளை!
தமிழென் நட்புடைத் தோழன்!

தமிழென் சுற்றம்! தமிழென் சிற்றூர்!
தமிழென் மாமணித் தேசம்!

தமிழ் யான் வாழும் தனிப்பெரு ஞாலம்!
தமிழே என்னுயிர் மூலம்!

என்றன் தமிழுடல் எழவே எழுவான்!
எழுதமிழ் வானின் பரிதி!

என்றன் தமிழ் மூச்சென்பது தமிழாம்!
எறிவான் இடிபுயல்! அறிதி!

என்றன் தமிழ் நரம்பிடை ஓடும்
எரிதழல் ஆற்றுக்குருதி!

என்றன் தமிழை எவன் பழித்தாலும்
எமன் அவனைத் தொடல் உறுதி!

நான் தமிழனடா! நானொரு தமிழன்!
நாற்றிசையும் இது மொழிவன்!

நானொரு வெறியன் என நகை செய்வோன்
நற்றமிழ் அறியான்! எளியன்!

நானுயர் தமிழின் வளமுணர் தமிழன்!
நந்தமிழ் எழயான் எழுவன்!

நான் இழிகழுதை அல்லன்! வலியன்!
நானிலத்தீர்! இது தெளிமின்!

—காசி ஆனந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி தந்த கணையாழி!

அன்பு நண்பா,

சென்ற சில நாட்களாக நடைபெற்று வரும் சில நிகழ்ச்சிகள் என் நெஞ்சைக் குத்திக் குடைகின்றன; வேதனை இதயத்தை துளைத்தெடுக்கிறது; சிந்தனையோ ஒரு நிலையில் இல்லை; நொந்துகிடக்கிறது உள்ளம்; என்னுடைய உடலின் ஒரு பகுதியை யாரோ வாள் கொண்டு அரிவது போன்ற ஓர் உணர்ச்சி! என்னால் இதை நம்பவும் முடியவில்லை; நம்பாமலிருந்திடவும் முடியவில்லை!!

நண்பா, எனது இந்த வேதனைக்குக் காரணம் என்ன என்பதை நீயே ஊகித்திருப்பாய்! நான் மட்டுமென்ன, நீயும் இதே நிலையிலேயே இருக்கிறாய் என்பதை நான் உணராமலில்லை! நம்முடையஎதிரிகள்—நம்முடையவிரோதிகள் —ஆட்சியாளர்கள் — இத்தகைய துன்பத்தை, துயரத்தை, வேதனையைத் தந்திருந்தால் உள்ள நிறைவுடன், உவகையுடன் அதைத் தாங்கிக்கொண்டிருந்திருப்பேன்! விடுதலைப் போராட்டத்திலே மாற்றார் தருகின்ற வேதனைகளை அனுபவித்திடுவது கூட ஒரு சாதனைதானே!

ஆனால் நமது உடன் பிறப்புக்கள் — நம்முடைய உணர்வுகளுடன் இதுவரை ஒன்றிக் கிடந்தவர்கள்—நமது இரத்தத்தின் இரத்தங்கள்—நெஞ்சம் நிறைந்த அருமைத் தம்பிமார்கள்—ஒரு சிலர் இன்றைக்கு நமது நெஞ்சிலேயே ஈட்டிகொண்டு தாக்குவது போல எம்மைவிட்டுத் தனியே பிரிந்து சென்றிடவும் —தனி அணியமைத்திடவும் எடுத்துள்ள முடிவு உள்ளபடியே தாங்கொணு வேதனையை தந்திடுகிறது!

கட்டுக்கோப்புடன்—ஒரேயணியாக — ஒன்றுபட்ட நெஞ்சினராக —ஒரே தலைவனின் கீழ் — தமிழினத்தார் தமிழ் ஈழ நாட்டு விடுதலைக்குப்போராடிட வேண்டிய தருணத்தில் — இயக்க ரீதியில் இப்படியொரு சின்னப்பிரிவு ஏற்படுவது கூட இனத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்பதை இந்தத் தம்பிகள் சிந்தித்திடத் தவறியதுதான் எனக்கு பெருத்த ஆச்சரியத்தைத் தருகிறது! யாருடனேயோ —எதற்கோ கோபித்துக்கொண்டு — தமிழினத்தின் விடுதலை இயக்கத்தை துண்டாடும்போக்கில நடந்திட எப்படித்தான் இவாகளுக்கு இதயம் இடம் கொடுத்ததோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன்!

''நீ யார் எங்களைக்கேட்டிட — நாங்கள் எண்ணியபடி விரும்பியபடிதான் நடப்போம்'' என்று இந்தத் தம்பிகள் என்னைக் கேட்பார்களானல் —நான் அவர்களுக்கு சொல்வேன்— நீங்கள் என்னுடன் அண்ணு அண்ணு என்று அழைத்து நேசமுடன் பழகிய அந்தப் பாச உணர்ச்சியை நீங்கள் ஒருவேளை மறந்திருந்தாலும் நான் ஒரு நாளும் மறந்துவிடமாட்டேன்! ஆத்திரம் கொண்ட தம்பி அப்படி இப்படிப்பேசினுலும், அறிவுடைய அண்ணன் அதற்காககோபித்திட மாட்டான்! உங்களையெல்லாம் மக்கள் முன் அறிமுகப்படுத்தி— உருவாக்கி வளர்த்துவிட்டது இந்த அண்ணனின் பேனுதான் என்பதை ஒருவேளை நீங்கள் மறந்தாலும் தமிழர் சமுதாயம் மறக்காது!!

இதையெல்லாம் இப்படி பகிரங்கமாக எழுதுகிறேனே — என்று பிரிந்து செல்ல நினைக்கின்ற என் தம்பிகள் ஒருவேளை வருத்தப்படலாம்; உங்களை நான் அறிந்து கொள்ளவும்—என்னை நீங்கள் புரிந்து கொள்ளவும், உறவுப்பாலமாக அமைந்தது இந்த 'அரசியல் மடல்' பகுதிதான்! எனவேதான் இந்த மடல் மூலமே உங்களுக்கு எழுதுகிறேன்!

நண்பா, சென்றகிழமை எனக்கொரு கடிதம் வந்தது — பெயரிடப்படாத கடிதம்; தியாகி சிவகுமாரனின் கடித உறையில் வைத்து அனுப்பப்பட்ட கடிதம்; அதில் பின் வருமாறு எனக்கு 'எச்சரிக்கை' விடப்பட்டிருந்தது!

> ''நீ சுதந்திரனில் நாங்கள் எல்லாம் மடையன்கள் என்று நினைத்து உன்னுடையபாட்டில் எழுதுகிறாய்? நீ காத்தமுத்து சிவானந்தனையும் சேனதியையும் பற்றித் தூக்கிப்பிடிக்கிறாய்; உண்மையானவர்களை விட்டுவிட்டு உங்களுக்கு வால்பிடிக்கும் மடையர்களைப்பற்றி எழுதுகின்றாய். காத்தமுத்துவுக்கு என்ன 'புகழேந்தி' பாரதி நினைவோ? சிலை செல்வநாயகம் திறந்தால் தூக்கிப்பிடிப்பாய்; குமார் இறந்தபடியால் அதைப்பற்றி நீ எழுதவில்லை; உனக்கு உண்மையான ஆட்களை அடையாளம் காணத்தெரியாவிட்டால் சொல்லு— புரியவைக்கிறோம்! என்ன நடக்கும் என்பதை யோசித்து நீ செயல்படு !''

இப்படியொரு கடிதம்'கூட்டணியினர் கள்ளர்'என்ற குறிப்புடன் வந்திருக்கிறது எனக்கு! இந்த அனுமதேயக்கடிதத்தை 'பிரிந்து' செல்ல நினைக்கின்ற தம்பிகளில் யாரோ ஒருவர்தான் எழுதியிருப்பதாக நான் கூறவில்லை; நமக்குள் — இயக்கத்துக்குள் சிறிய அளவு பிரிவும் பிளவும் ஏற்பட்டாலும் — நமது எதிரிகள் அதை எவ்வளவு தூரம் பெரிதுபடுத்தி — எத்தனையெத்தனை 'சகுனி' வேலைகள் செய்திடத் தொடங்குவர் என்பதை எடுத்துக்காட்டிடவே அந்தக் கடிதத்தை மேலே குறிப்பிட்டேன் !

தமிழர் கூட்டணியும், அதன் துணை இயக்கங்களான தமிழ் இளைஞர் பேரவையும், தமிழ் மகளிர் பேரவையுமே தமிழ் மக்கள் நம்பிக்கைவைத்துள்ள விடுதலைப் பேரியக்கங்கள்! இந்த இயக்கங்களுக்குள் இருந்தபடியே ஒரே தலைமையின் கீழ் கட்டுக்கோப்புடன் செயல்படுவதன் மூலமே தமிழினம் தனது இலட்சியத்தை சென்றடைய முடியும்! தமிழர் கூட்டணியினதும்—அதன் துணை இயக்கங்களினதும் போக்கில் கருத்து முரண்பாடு ஏற்படுமானல்—உள்ளிருந்தே நாம் அதை முடிந்தவரை இடித்துரைத்து திருத்திடமுடியும்! பிரிந்து பிளவுபட்டு நிற்பதால் தமிழினம் எதையும் சாதித்திட முடியாது !

மதிப்புக்குரிய சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதுக்கட்சி அமைத்து அவரால் என்ன செய்ய முடிந்தது? நாலும் ஒரு 'கட்சியின் தலைவர்' என்ற அந்தஸ்தை அவர் பெற்றுக்கொண்டாரேயன்றி சமுதாயத்துக்கு ஏதாவது நன்மை விளைந்ததா? மாறுகத் தீமையே விளைந்தது; நல்லூர்த்தொகுதியில் சென்ற பொதுத்தேர்தலில் அவரது கட்சி வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டதால் தமிழரசுக்கட்சியின் வாக்குகள் பிளவுபட்டன; இதன் பயனுக தொகுதி தமிழினத்துரோகி ஒருவரின் கைக்குச் சென்றது! நாம் பிளவுபடுவதால் ஆதா

## அரசியல் மடல்

யம் பெறுவது இனத்தின் எதிரிகளே என்பதற்கு இது ஒன்றே சரியான எடுத்துக்காட்டன்றோ ?

ஓர் இயக்கம் என்பது ஒரு சிலரை நம்பியிருப்பதல்ல; மனிதர்கள் வரலாம்—போகலாம்; இயக்கம் ஒருபோதும் அழியாது; ஒரு சிலர் தமிழ் இளைஞர் பேரவையைவிட்டுப் பிரிந்துசென்று தனியாக செயல்பட்டாலும், இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல — பல்லாயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் தயாராக இருக்கிறார்கள்; எதற்காக நீ கவலைப்படுகிறாய் — என்று நீ என்னைத் தேற்றுகிறாய் நண்பா !

உண்மைதான்—இயக்கம் என்பது சமுதாயத்துடன் இரண்டறக்கலந்திருப்பதுதான்! இயக்கத்தின் முன் தனி மனிதர்கள் பெரிதல்லத்தான்! ஆனாலும் இயக்கத்தைவிட்டு ஒருவர் என்றாலும் பிரிந்துபோவதையோ—ஒதுங்கிப்போவதையோ கூடியவரை தடுத்து நிறுத்த வேண்டும்! தவிர்த்திட முயலவேண்டும் !

எனவே பிரிந்துபோகப்போவதாக தாயுடன் முரண்டு பண்ணும் குழந்தைகள் போல முரண்டு பண்ணும் என் அன்புத் தம்பிகளே! என் இரத்தத்தின் இரத்தங்களே! சமுதாயத்தை முன்வைத்து உங்கள் சிந்தனையை மறு பரிசீலனை செய்து பாருங்கள்! இயக்கத்தின் ஒற்றுமைக்கும் இனத்தின் எதிர்கால வாழ்வுக்குமாக வேண்டுமானல் உங்கள் கால்களில் வீழ்ந்து வணங்கிடவும் நான் தயார்! புதிய அணி அமைப்பதை தவிர்த்து மீண்டும் தமிழ் இளைஞர் பேரவைக்கு வாருங்கள் !

இன்றைக்கு — தியாகி சிவகுமாரனுக்குப் பின்னர்—சிங்கள அரசாங்கமே கண்டு நடுங்கும் தீவிரவாதிகளில் ஒருவர் சிறையில் வாடும் திசைவீரசிங்கம்! இந்த வீரசிங்கத்தை அனுராதபுரம் தனிமைச் சிறையிலடைத்துவைத்து துன்புறுத்தி வருகின்றனர் சிங்கள வெறியர்கள்! இந்த இளைஞருக்கு எப்போது விடுதலையென்பதும் இன்னும் நிச்சயமில்லை! அப்படிப்பட்ட துணிச்சல்மிக்க இந்த இளைஞர் தம்மை அண்மையில் சிறையில் சந்தித்த நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார் !

''உண்மையான இனப்பற்றும் நாட்டுப்பற்றும் இருப்பவன் ஒருநாளும் தலைவர்களைக் கேலிசெய்ய மாட்டான், தலைவர்கள் சொல்வதை தட்டி நடக்க மாட்டான்! இன்றல்ல—என்றுமே தமிழர் கூட்டணியை பிரிந்து செயல்படக் கூடாது; செயல்படமுடியாது! தந்தை செல்வாவை கேலி செய்வதென்றால் அது என் தாயை கேலி செய்வதாகவே கருதுகிறேன்! தலைவர்கள் தவறு செய்தாலும் அதைத் திருத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடுவதுதான் விடுதலைவேட்கையுள்ள தமிழ் இளைஞன் செய்யும் காரியமாகும். தலைவர்கள் இல்லாமல் இன்றல்ல — என்றும் எம்மால் எதையும் சாதிக்க முடியாது !''

இதுதான் வீரன் திசைவீரசிங்கத்தின் கருத்து. எத்துணை தீர்க்கமான, தெளிவான கருத்து இது! இயக்கத்திலூறிய ஒருவரின் வாயிலிருந்து இந்தக் கருத்துத்தான் வெளிப்படும்! இன்றைய நிலையில் தமிழ் இளைஞர்கள் பின்பற்றித் தீரவேண்டிய கருத்தும் இதுதான் !

சில தம்பிகளின் செயலால் என் உள்ளம் வேதனையடைந்திருந்தாலும் — அந்த வேதனையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் விடைபெற்றது சென்ற யூன் பதினேராம்நாள் அந்தத் தியாகத்திருவுருவத்தைக்கண்டு அதை ஆரத்தழுவிக் கொண்டபோது !

ஆம், உறுதியைக்காட்டுகின்ற முகம் — அந்த முகத்திலே தியாகத்தினுல் ஒளிவீசும் தேஜஸ் — ஒளி பொருந்திய கண்கள்—முகத்திலே அடர்ந்த தாடி — வளர்ந்து காணப்பட்ட தலைமுடி—அன்பும் பாசமும் குழைந்த வார்த்தைகள் — இவற்றுடன் கூடிய அந்த உருவத்தை — ஆம் அருமை உடன்பிறப்பு — வண்ணை ஆனந்தனை நெஞ்சினிக்க, வாயினிக்க வரவேற்றபோது — என் நெஞ்சப் பாரமெல்லாம் எங்கோ மறைந்தது !

வண்ணை ஆனந்தன்—இயக்கத்திலே ஊறி வளர்ந்தவர்; இலட்சியத்திலே உறுதிமிக்கவர்; கடமை, கண்ணியம் கட்டுப்பாடு தவறுதவர்; கொஞ்சம் ஆத்திரக்காரர் என்றாலும் பொறுப்புணர்வுமிக்கவர்! மூன்று நீண்ட ஆண்டுகள்—ஏறத்தாழ 1095 நாட்கள் வெலிக்கடைச் சிறையின் இருட்டறையுள் தவம் செய்தவர்; நமது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுடன் ஒன்றுக சிறையிருக்கும் பேறு பெற்றவர் !

சிறைவாழ்வு என்பது எத்தகைய கஷ்டம் நிறைந்தது என்பதை காந்தியடிகளே பின்வருமாறு கூறுகிறார்!

> ''நாடு கடத்தப்பட்டோ சிறையிலடைக்கப்பட்டோ நீண்டகாலம் தனித்துவாழ்வதென்பது பொறுத்தற்கரிய ஒன்றாகும். அதைப்பொறுக்கமுடியாமல் பல தீர புருஷர்கள் உடலும் உள்ளமும் உடைந்துபோயிருக்கிறார்கள். வெளியுலகத்தின்தொடர்பு அற்றும், உற்றுழி உதவும் நண்பர்களையும், இணைபிரியாத் தோழர்களையும் விட்டு நீங்கியும்—நம் உயிருக்கு உயிராக விளங்குபவர்களைப் பிரிந்தும் வாழ்வதென்பது சொல்வதுபோல் அவ்வளவு எளிதில்லை. அதற்கு ஒப்பற்ற உளத்திட்பமும், எதுவரினும் கலங்காத ஆழமுடைமையும் எதையும் பொறுததுக்கொள்ளும் நெஞ்சுரமும் அவசியம்!''

மேற்கண்டவாறு காந்தியடிகளே கூறியது போல—ஒப்பற்ற உளத்திட்பமும், எதுவரினும் கலங்காத ஆழமுடைமையும், எதையும் பொறுத்துக்கொள்ளும் நெஞ்சுரமும்கொண்டு —மூன்று ஆண்டுகள் சிறையிலிருந்து விட்டு வெளியே வந்த தம்பி வண்ணை ஆனந்தன் உடனடியாக என்னைப் பார்க்க ஓடோடி வந்தார்!

அவருக்கு நான் கணையாழி சூட்டி பாராட்டவேண்டிய நேரத்தில்— சிறையிலிருந்து வெளியே வந்திருந்த அவர் தன்னுடைய பாசத்தின் எடுத்துக்காட்டாக தாமே எனக்கொரு உதயசூரியன் கணையாழியை கொண்டு வந்து என்னுடைய கை விரலில் சூட்டி மகிழ்ந்தார்!

மூன்று ஆண்டுகள் சிறையிருந்துவிட்டு வெளியேறிய அந்தத் தியாகச் செம்மல்— தமது கையால் எனக்கு கணையாழி தந்து மகிழ்ந்தபோது — என்னுடைய கவலைகள் எல்லாம் எங்கோ ஒடி மறைந்தன. என்னுடைய பணியை யார் தூற்றினாலும்— யார் என்மீது வசைபாடினாலும்—யார் என்னை மதிக்க மறந்தாலும்—என்னுடைய பணிகளுக்காக தன்னுடைய புனிதமான கரங்களினல் தியாகச்செம்மல் தம்பி வண்ணை ஆனந்தன் கணையாழி சூட்டி மகிழ்ந்தாரே—அந்த மகிழ்ச்சியும் பாசமும் ஒன்றே எனக்குப்போதும்! இனத்துக்காக—தமிழ் ஈழ விடுதலைக்காக— தமிழினத்தின் மீட்சிக்காக — தொடர்ந்து போராடு— என்று அந்தக் கணையாழி எனக்குக் கட்டளையிடுகிறது!

ஆம், தூற்றுவார் தூற்றட்டும் — போற்றுவார் போற்றட்டும்! என் இலட்சியப்பணி தொடரும்!

உன் நண்பன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## அவர்கள் ஓர் இலட்சம்! நாம் 35 இலட்சம்!!

உலக வரைபடத்தில் புத்தம்புதிய சுதந்திர நாடொன்று பூத்திருக்கிறது.

சின்னஞ்சிறு சைப்பிரஸ் தீவிலுள்ள துருக்கி மக்கள் தங்கள் பகுதியை தனி நாடாக்கிக்கொண்டுவிட்டார்கள்; சுதந்திர மக்களாக தம்மை ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்!

தனிநாடு அமைத்துக்கொண்டதன் மூலம் சைப்பிரசின் பெரும்பான்மை இனத்தினரான கிரேக்கர்களின் ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டிருக்கிறார்கள் சிறுபான்மையினரான துருக்கி மக்கள்!

பதினறு ஆண்டுகாலமாக கொந்தளித்துக்கொண்டிருந்த சைப்பிரஸின் இனப்பிரச்சினைக்கு 'தனிநாடு' மூலம் இப்போது தீர்வுகாணப்பட்டிருக்கிறது!

இத்தனைக்கும் 'சைப்பிரஸ்' பென்னம்பெரிய ஒரு நாடல்ல; சின்னஞ்சிறிய குட்டித்தீவு!

முழு சைப்பிரசின் விஸ்தீரணமுமே 3571 சதுரமைல்கள் தாம்!

எங்கள் தமிழ் ஈழத்தின்—அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களின்—மொத்தப் பரப்பளவின் சரிபாதியளவே முழு சைப்பிரஸ்தீவின் விஸ்தீரணம்!

இத்தகைய ஒரு குட்டித்தீவான சைப்பிரஸ்தான் — இன்று துருக்கி சைப்பிரசாகவும், கிரேக்க சைப்பிரசாகவும் இரு நாடுகளாகியிருக்கின்றன!

ஒரு நாடு சுதந்திர நாடாகத் தனித்து இயங்குவதற்கு அந்த நாட்டின் நிலப்பரப்பளவு முக்கியமல்ல என்பதற்கு இது சரியான எடுத்துக்காட்டாகும்!

மக்கள் தொகையை எடுத்துக்கொண்டாலும் சைப்பிரசின் முழு மக்கள் தொகையுமே ஆக ஆறு இலட்சம் பேர்தான்! இதில்—சைப்பிரசின் வடபகுதியில் ஒரு இலட்சம் துருக்கியர்களும், சைப்பிரசின் தென்பகுதியில் ஐந்து இலட்சம் கிரேக்கர்களும் வாழ்ந்து வருகின்றனர்!

**சைப்பிரசின் வடபகுதியில் வாழும் ஒரு இலட்சம் துருக்கியர்கள்தான் இன்றைக்கு தமது பகுதியை சுதந்திர நாடாக்கியிருக்கின்றனர்!**

**ஒரு நாடு சுதந்திர நாடாகத் தனித்து இயங்குவதற்கு அந்த நாட்டு மக்களின் எண்ணிக்கைபலம் முக்கியமல்ல என்பதை இது எடுத்துக்காட்டுகிறது!**

இதுமட்டுமல்ல — இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு தனிநாடுதான் என்பதையும் சைப்பிரஸ் நிகழ்ச்சிகள் நமக்கு உறுதிப்படுத்துகின்றன!

ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்று சிங்களம் பெரும்பான்மையினரின் கைகளில் இந்நாட்டின் அரசியல் ஆதிக்கம் ஒப்படைக்கப்பட்ட 1948ம் ஆண்டு தொடக்கம் — சிங்கள அரசாங்கங்கள் தமிழ் ஈழத்தில் — தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தில் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் நிலத்தை சூறையாடி — தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலேயே அவர்களை சிறுபான்மையினராக்கும் சதி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுபோலவே—சைப்பிரசிலும் பெரும்பான்மை கிரேக்க அரசாங்கம் கிரேக்கர்களை குடியேற்ற சிறுபான்மை துருக்கியர்களின் நிலத்தை சூறையாடுவதில் ஈடுபட்டது.

துருக்கியர்களின் பிரதேசத்தில் கிரேக்க இனத்தினரை குடியேற்றுவதை எதிர்த்து துருக்கியர்கள் போராடினர்.

1958-ம் ஆண்டு இங்கு தமிழ்—சிங்கள இனக்கலவரம் வெடித்ததுபோலவே சைப்பிரசிலும் 1964-ம் ஆண்டு கிரேக்க—துருக்கிய இனங்களிடையே பயங்கர இனக்கலவரம் வெடித்தது! கடும்போர் மூண்டது!

சைப்பிரஸ் கிரேக்கர்களுக்கு உதவியாக கிரீஸ் நாடு நின்றது; சைப்பிரஸ் துருக்கியர்களுக்கு உதவியாக துருக்கி நாடு நின்றது!

இதன் காரணமாக ஐ. நா. சபையின் தலையீட்டால்—சைப்பிரசில் புதிய அரசியல் சட்டம் உருவாகியது. இந்தப் புதிய அரசியல் சட்டத்தின்படி — கிரீஸ், துருக்கி இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டதுடன் — கிரேக்கர் ஜனாதிபதியென்றால், துருக்கியர் துணை ஜனாதிபதி என்ற ரீதியில ஆட்சித்தலைமையில் இரு இனத்தவர்களின் உரிமைகளும் நிலைநாட்டப்பட்டன உத்தியோகத் துறையிலும், இரு இனத்தவர்களினதும் வீதாசாரத்துக்கு ஏற்ற முறையில் பதவிகள் பங்கிடப்படவேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே எழுதப்பட்டது!

அரசியல் சட்டத்தின் மூலம் இவ்வளவு தூரம் சிறுபான்மை துருக்கியர்களின் உரிமை பாதுகாக்கப்பட்டும்— சைப்பிரஸ் தீவில் இன ஒற்றுமை — ஒருமைப்பாடு — ஏற்படுத்தப் படமுடியவில்லை! பெரும்பான்மை கிரேக்கர்களின் அதிகாரத்திமிர் சிறுபான்மை துருக்கியர்களை அடக்கி ஆளவே முயன்றது!

இதன் காரணமாக கடந்த ஆண்டு இரு இனங்களுக்குமிடையே மீண்டும் கடும்போர் ஏற்பட்டு — அதன் விளைவாக சைப்பிரஸ் துருக்கியர்கள் இன்று தனிநாடு அமைத்து விட்டார்கள்! இதன் மூலம் சைப்பிரசின் நீண்டகால இனப்பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது!

சைப்பிரசின் ஒரு இலட்சம் துருக்கியர்கள் தங்களுக்கெனத் "தனிநாடு" ஒன்றை உருவாக்கிக்கொண்ட நிகழ்ச்சி—சுதந்திரத் தமிழ் ஈழம் கோரிவரும் 35 இலட்சம் ஈழத்தமிழர்களுக்கும் கிடைத்த ஒரு ஆதர்ஸ வெற்றியாகும்!

**ஒரு இலட்சம் துருக்கியர்கள் சைப்பிரசில் ஒரு தனி நாட்டை நிறுவுவது நியாயமானதென்று உலக நாடுகள் ஒப்புக்கொள்ளுமானல் — 35 இலட்சம் ஈழத் தமிழர்கள் தங்களுக்கென ஓர் தனி நாட்டை — அதுவும் 1618-ம் ஆண்டுவரை சுதந்திரமாக இயங்கிவந்த தங்கள் பாரம்பரிய தமிழ்ஈழ நாட்டை — மீண்டும் சுதந்திர நாடாக்கிக்கொள்வதை அநியாயமானதென்று எவரும் கூறமுடியாது!**

சைப்பிரசிலாவது துருக்கி மொழிக்கும், இனத்துக்கும் அரசியல் சட்டத்தில் சமவாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது; அப்படியிருந்தும், அவர்கள் பெரும்பான்மை கிரேக்கர்களுடன் சமாதானமாக வாழமுடியாது பிரிந்து சென்று 'தனிநாடு' அமைத்துவிட்டார்கள்!

இந்நாட்டிலோ — புதிய அரசியலமைப்பிலேயே தமிழும், தமிழினமும் அவமதிக்கப்பட்டிருக்கிறது; அடிமை முத்திரை குத்தப்பட்டிருக்கிறது! தமிழர் நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களால் கபளீகரம் செய்யப்படுகின்றன.

**இந்நிலையில் — சைப்பிரஸ் துருக்கியர்களுக்கிருந்த நியாயத்தைவிட ஈழத்தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆயிரம் மடங்கு நியாயமுண்டு. உலக நாடுகளின் பார்வையில் இந்த நியாயங்கள் ஆணித் தரமாக [illegible]ப்படவேண்டும்!**

# அமைச்சர் இரத்நாயகாவின் முன் இளைஞர் நடத்திய போராட்டம்!

—1-ம் பக்கத் தொடர்

விக் கொண்டிருக்கிறார்கள். இவ்வேளையில் திடலைச் சுற்றியிருந்த இருப்புக்கம்பிக்கு மேலால் எட்டு உருவங்கள் குதிக்கின்றன. உடையுள் மறைத்துவைக்கப்பட்டிருந்த சுலோகங்கள் கையில் எடுக்கப்படுகின்றன. சுலோகங்கள் பின்வரும் உண்மைகளைக் கூறுகின்றன.

BOYCOTT SINGALA SRI LANKA RACIST CRICKET TEAM, DON'T PLAY WITH APARTHEID, SRI LANKA RACISM = SOUTH AFRICA'S APARTHEID, WE LOVE CRICKET — HATE DISCRIMINATION.

இப்போதுதான் தெரியும் இவர்கள் ஈழவிடுதலை வீரர்கள் என்பது. ஓடுகிறார்கள் மைதானத்தின் மத்தியை நோக்கி. பார்வையாளர் கலரியிலிருந்து எழுகின்றது பெருங் கூக்குரல். மைதானத்தின் அக்கம்பக்கமெல்லாம் நின்றிருந்த பொலீசார் ஓடுகின்றவர்களைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள். அவர்களின் அதிகாரத் தொனி ஒருபுறம். விளையாட்டு வீரர்களோ நின்ற நின்றபடி திகிலில். ஸ்ரீலங்கா கோஸ்டியில் துடுப்பெடுத்தாடிய இருவருக்கும் முகத்தில் அசடுவழிகிறது. பயம் ஒருபுறம், திகில் மறுபுறம், அவமானம் தலைகவிழ்க்கிறது. இதைப் பார்வையாளர் கலரியில் இருந்து அமைச்சர் இரத்தினுயக்காவும், இலங்கையின் இங்கிலாந்து தூதுவரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஓடியவர்கள் மைதானத்தின் நடுவில் (Pitch-ல்) படுத்துவிட்டார்கள். பின் தொடர்ந்து ஓடிய பொலிசாரால் என்ன செய்யமுடியும். இலங்கைப்பொலிசார் எனில் மைதானத்தின் நடுவில் இரத்தப்பலியை எதிர்பார்க்கலாம். இங்கிலாந்துப் பொலிசார் அல்லவா, நாகரீகம் தெரிந்தவர்கள், பண்பாடு நிரம்பியவர்கள், மனிதாபிமானம் அவர்கள் கொள்கை. திறமையும், தகுதியும் அவர்களின் இலட்சணங்கள். படுத்திருக்கும் இளைஞர்களின் பிரச்சினை புரிந்துவிட்டது. நியாயத்திற்காகவும், தர்மத்திற்காகவும் போராடுபவர்கள் என்பது விளங்கிவிட்டது. இருந்தும் கடமை எப்படியாவது தூக்கித் தாங்கியாவது இவர்களை வெளியில் கொண்டுபோடும்படி அவர்களை வற்புறுத்தியது. விளையாட்டு வீரர்கள் ஒருபுறம் எழுந்து போகும்படிவேண்டுகிறார்கள். நடுநிலையாளர்கள் தமது பொறுப்பை பிரதிபலிக்காமலில்லை. வீரர்களோ தாம் எழுந்துபோகப் போவதில்லை என்று அடம்பிடிக்கிறார்கள். இறுதியாக உரிமைக் குரலை அவர்கள் வாய் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்க பொலிசாரால் வெளியே கொண்டு வரப்படுகிறார்கள். சிங்கள இனவெறியர்களின் வெறிக்கூக் குரல்கள் ஆங்காங்கே கேட்கப் படுகிறது.

கடும் கோபமடைந்து பொலிஸ் பிரதம அதிகாரி வருகிறார். இங்கிலாந்தின் சட்டம் அவரின் அதிகாரத்தைப்பேசவைக்கிறது. ஆணையிடுகிறார் — எண்மரையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுபோகும்படி. உடன் பொலிஸ் வாகனம் வரவழைக்கப்படுகிறது. தமது கடமையைச் சரிவர ஆற்றிவிட்ட மகிழ்வுடன் நின்றுகொண்டிருக்கும் வீரர்கள் எண்மரும் வாகனத்தில் ஏற்றப்படுகிறார்கள். பலர் இதைப் பார்த்துக்கொண்டிருக்க, வாகனம் பொலிஸ் நிலையத்தை நோக்கி நகர்கிறது.

பொலீஸ் நிலையத்தில் இறக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். சோதிக்கப்படுகிறார்கள். அவர்களிடம் இருந்த பொருளெல்லாம் பொலீசாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. பெயர், விலாசம் போன்ற விபரங்கள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்க, ஆத்திர மிகுதியுடன் வந்த பொலிஸ் அதிகாரி எல்லோரையும் கூண்டில் அடைக்கும்படி உத்தரவிடுகிறார். எட்டுப்பேரும் ஏழு அறைகளில் பூட்டப்படுகிறார்கள்.

இது இப்படியிருக்க மைதானத்தின் மதிலைச் சுற்றியுள்ள வீதிகளில் வந்துகொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவண்ணம் பல இளைஞர்கள் உலாவிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கைகளில் பின்வரும் சுலோகங்கள் காணப்படுகின்றன.

SIRMAVO'S CANABALISM IS NOT SOCIALISM.

BUDDIST CLERGY CEYLON MISERY.

WE ARE ENSLAVED IN OUR MOTHER LAND.

இளைய வீரர்கள் கைது செய்யப்பட்ட செய்தி அவர்களை உடன் எட்டிவிட்டது. எப்படியாவது அவர்களை வெளிக்குக் கொண்டுவந்துவிடவேண்டும் என்று அவர்கள் தூண்டப்படுகிறார்கள். ஈழவிடுதலை முன்னணியைச் சேர்ந்த ஒரு கணக்காளரும், ஒரு இலங்கைப் பழைய இராணுவ அதிகாரியும் அவர்களை பிணை எடுக்கச் செல்கிறார்கள். 5½ மணி நேரங்கள் சிறையிலடைக்கப்பட்ட வீரர்களை, "இனியும் மைதானத்தினில் செல்வதில்லை" என்ற வாக்குத் தத்தத்தின் மூலம்வெளியில் கொண்டுவருகிறார்கள். வெளியில் சில இளைஞர்கள் அவர்களை கூட்டிச்செல்ல காத்துநிற்கிறார்கள். எல்லோரும் 200மைல் கடந்து வந்த கடமையை முடித்துவிட்ட மகிழ்ச்சியில் வாகனத்தில் திசையறியாது போகிறார்கள்.

அவர்கள் எண்ணங்கள் இலண்டனில் 11ம் திகதி ஓவல்திடலில், அவுத்திரேலியாக்கோஸ்டியுடன் ஸ்ரீலங்கா கோஸ்டி விளையாடும் போட்டியை நோக்கிப் பறந்துகொண்டிருக்கின்றது. எட்டுப்பேரை எண்பதாகத் திரட்டிவிட்ட மகிழ்ச்சி அவர்களை மெய்குளிர வைக்கிறது. ஓவல் திடலில் கேட்கவிருக்கும் போர் முரசு அவர்கள் உள்ளங்களில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. திடலில் நடந்த வீரத் திருவிளையாடல்கள் பின்னர் சுதந்திரனில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜனின் கையாட்களின் ரௌடித்தனம்

ஆரைப்பற்றை எனும் வீரக்கிரரமத்தைச் சேர்ந்த தவம் என்னும் இளைஞர் தமிழர் கூட்டணியின் தீவிர ஆதரவாளர். கார்ச்சாரதியாகப் பணியாற்றுபவர். மே 22 குடியரசு பகிஷ்கரிப்புக்கு பின்னர் ஒரு நாள் இவர் மட்டக்களப்பின் இரண்டாவது பா. உ. ராஜன் செல்வநாயகத்தினால் தெருவில் வைத்து வழிமறிக்கப்பட்டார்.

"நீர் தானே இங்கு புரட்சியணியைச்சேர்ந்தவர்? காசி ஆனந்தனை காரில் ஏற்றித் திரிந்தவர்? கறுப்புக்கொடி கட்டியவர்? என்று கேட்டாராம் ராஜன் தவத்தைப் பார்த்து. தவம் ஆறுதலாக அதற்குப்பதில் சொன்னார்— "ஆம் நான்தான் கறுப்புக் கொடி கட்டினேன்; அதற்கு என்ன இப்பொழுது?"

இதற்கிடையே நிறை வெறியுடன் ராஜனின் ஜீப்பில் இருந்த இரண்டு 'சண்டியர்'கள் தவத்தின் சட்டையைப் பிடிக்கவே இளைஞரான தவம் அவர்களை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டார். குடிவெறியர்கள் உருண்டு புரண்டு விழுந்தார்கள்! ராஜன், அவர்களையும் ஜீப்பில் இழுத்துட் போட்டுக் கொண்டு எடுத்தாராம் ஓட்டம்! போகும்பொழுது ராஜனிடம் தவம் இப்படிக் கூறினாராம்; — உனக்கும் எனக்கும் ஏதாவது பிரச்சினை இருந்தால் வா—அடிபட்டுக் கொள்வோம்; ஆனால் கையாட்களை வைத்துமட்டும் என்னைப்பயமுறுத்தநினைத்து விடாதே"

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு திரும்பியும் பார்க்காமல் ராஜன் எடுத்தார் ஓட்டம்!

* *

மட்டக்களப்பில் 'கராச்' ஒன்றில் வேலை செய்யும் ஏழைத்தொழிலாளி ஒருவர். தன்மானம் நிறைந்தவர். கலப்புத் திருமணம் செய்து சாதியை முடியடித்தவர். தமிழர் கூட்டணியின் ஆதரவாளர். குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலின் போது மட்டக்களப்பிலுள்ள தனது குடிசையில் கறுப்புக்கொடி கட்டியதற்காக வெறி பிடித்த 'சோசலிச' ஆளுங் கட்சிக் கூலிப்படைகள் இந்த ஏழைத் தொழிலாளியை சைக்கிள் செயினால் தாக்கியது மட்டுமன்றி நிறைகர்ப்பிணியாக இருக்கும் அவரது மனைவியின் வயிற்றிலும் உதைத்திருக்கின்றனர்! இந்த மிருகவெறியர்களுக்கு அரசியலிலிருந்து முடிவு கட்டும் காலம் நெருங்கிவிட்டதாக மட்டக்களப்பு மக்கள் ஆத்திரத்துடன் கூறிக் கொள்கின்றனர்.

* *

மட்டக்களப்பில் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலின் போது அரசுக்கும் அரசு எடுபிடிகளுக்கும் எதிரான சுலோகங்கள் எங்கும் நிறைந்து காணப்பட்டன. வீதியெங்கும், சுவரெங்கும் இவை நிறைந்து காணப்பட்டன. அரசாங்க அடிவருடியான 'பீயார்'இவற்றை ஒவ்வொன்றாக அழிப்பித்துக் கொண்டு வந்தாராம். ஓரிடத்தில் காணப்பட்ட சுலோகத்தை அவரால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை. மையினால் அதை அழிக்கும்வரை அவரால் பொறுக்கமுடிய

## மட்டக்களப்பு செய்திகள்

வில்லை. "மண்ணைப்போட்டு மூடு; மண்ணைப்போட்டு மூடு" என்று அந்தத் துரோகி அலறிப்புடைத்தாராம்!

* *

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் ராஜன்செல்வநாயகத்தின் ஏவலின்படி இருமாணவர்கள் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலுக்கு முதல்நாள் கல்லூரி வளவில் வைத்து காடையர்களால் தாக்கப்பட்டதாக கூறப்

# பலிக்கவில்லை!

படும் சம்பவம் பற்றி பொலிசார் நடவடிக்கையெடுக்க விருப்பதாகத் தெரியவருகிறது. இது சம்பந்தமாக சாட்சியங்கள் இப்போது பதியப்பட்டு வருகின்றன.

* *

மட்டக்களப்பில் குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால், பாடசாலை பகிஷ்கரிப்பு போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்ததாக கூறி மேற்படி கல்லூரியைச்சேர்ந்த மாணவன் பரமதேவா என்பவரை கல்லூரியிலிருந்து அதிபர் வெளியேற்றியதையும், அதை எதிர்த்து மாணவர்கள் போர்க்கோலம் பூண்டு ஆட்சேபனை தெரிவித்ததன் பேரில் பிராந்தியக் கல்வி ஆணையாளரின் வெளியேற்ற உத்தரவு வாபஸ்பெறப்பட்டு பரமதேவா மீண்டும் கல்லூரியில் சேர்க்கப்பட்டதையும் வாசகர்கள் அறிவார்கள். எனினும் இதன்பின்னர் வேறு கல்லூரியில் இடம் எடுத்துத் தருவதாக பிராந்தியக் கல்வி ஆணையாளர் உறுதியளித்ததன் பேரில் மாணவர் பரமதேவா தாமாகவே அரசினர் கல்லூரியிலிருந்து விலகிக்கொண்டார்.

இந்த மாணவருக்கு இன்னும் எந்த ஒரு கல்லூரியிலும் இடம் தரப்படவில்லை. பரமதேவாவுக்கு எந்தக் கல்லூரியிலும் இடம்தரக் கூடாது என்று 'பீயார்' பிடிவாதமாக நிற்கிறாராம்!

பரமதேவாவுக்கு மட்டக்களப்பிலுள்ள ஏதாவது ஒரு கல்லூரியில் இடம் தரப்படாவிடின் — வடக்கு, கிழக்கு முழுவதிலும் பாடசாலைப்பகிஷ்கரிப்பொன்றை நடத்திட தமிழ் இளைஞர் பேரவை ஏற்பாடுசெய்து வருகிறது.

### கல்விக் கந்தோரின் நிருவாகச் சீர்கேடு!

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பழுகாமம் மாவித்தியாலயத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக—அதிபரில்லை—பதிலாக ஒரு உதவி ஆசிரியர் தற்காலிக அதிபராகக் கடமையாற்றுகிறார் — அவரின் கீழ் இரண்டு முதற்தர தலைமை ஆசிரியர்களும் ஒரு இரண்டாந்தரத் தலைமை ஆசிரியரும் கடமையாற்றுகிறார்கள். இத்தொகுதியில் பல பாடசாலைகளில் தலைமை ஆசிரியரில்லாதிருக்கும் போது— இம்மகாவித்தியாலயத்தில் மூன்று தலைமை ஆசிரியருக்கு என்ன வேலை— என பொது மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

---

## 'இலங்கையைத் துண்..

—1-ம் பக்கத் தொடர்

கொழும்பிலுள்ள அரசாங்கம், திட்டமிட்டு தமிழ் மக்களை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது இலங்கைத் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கப்பட்டுள்ளனா.

"1949ம் ஆண்டு முதல் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் மேற்கொண்டது. 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் உத்தியோக மொழியாக்கப்பட்டபோது, தமிழர்கள் மேலும் தள்ளி வீழ்த்தப்பட்டார்கள். 1971ம் ஆண்டு பெருந்தொகையான தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகப் படிப்புக்கு 'உச்சவரம்பு' கொண்டு வரப்பட்டது! 1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டதுடன், அரசாங்கத்தின் தமிழ் விரோத நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தையடைந்தன. புதிய அரசியல் சட்டத்தின் மூலம் — இருமொழிகளும் பல மதங்களும் கொண்ட இலங்கையை ஒரே மொழி, ஒரே மதம் கொண்ட நாடாக சிங்களத் தலைவர்கள் மாற்றினார்கள். தமிழ்த் தலைவர் திரு. செல்வநாயகத்தின் வார்த்தைகளில் சொல்லப் போனால் — "1972ம் ஆண்டு அரசியல் சட்டத்தின் பொருள், தமிழர்களுக்கு எதிரான இனக்கொலையே"

"இந்தக் கருத்துடைய தமிழர்களே தமிழ் சமுதாயத்தில் பெரும்பாலோராக இருப்பதை பெப்ரவரி மாதம் நடைபெற்ற இடைத் தேர்தல் நன்கு தெளிவுபடுத்திவிட்டது. இலங்கையிலுள்ள அரசும், இந்திய அரசும், பாலஸ்தீன அகதிகள் பிரச்சினைபற்றியும், தென்னாபிரிக்க இன ஒதுக்கல்பற்றியும் பேசினாலும், இத்தகைய தங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகள் பற்றி இவை கவனமெடுப்பதாக இல்லை!

"துரதிருஷ்டவசமாக சிங்களவர்கள் தமிழர்களைத் தங்கள் பகைவர்கள் என்றே கருதுகின்றனர். தமிழர்கள் இலங்கையின் பெரும்பாலான பாகத்தை 11ம் நூற்றாண்டுக்கும் 15ம் நூற்றாண்டுக்குமிடையே ஆட்சிபுரிந்தது உண்மைதான். ஆனால் அதற்காக தமிழ் நாட்டிலும், இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதியிலும் சமகாலத்தில் வளர்ந்துவரும் தமிழ்தேசிய உணர்ச்சிபற்றி இலங்கை அரசாங்கம் ஒப்புநோக்கி அச்சப்படவேண்டுமா?

"ஒரு சிங்களவர் குறிப்பிட்டதைப்போல— இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை சிங்களவரைப் பொறுத்தவரை ஒரு சிறுபான்மை பிரச்சினையல்ல; திராவிட நாட்டில் எங்கள் தேசிய வாழ்வுக்காக பெரும்பான்மைத் தமிழர்களுக்கு எதிராகபோராடுகிறோம்"

இந்த ஆதாரமற்ற அச்சத்தின் அடிப்படையில்தான இலங்கையில் சிங்களவர்கள் தமிழ் கலாசாரத்தைகொலை செய்யக்கூடிய ஒ[illegible] செயலையும்செய்கின்றனர்!"

## கிளிநொச்சியில்...

1-ம் பக்கத் தொடர்

தலைவர்கள் உரைநிகழ்த்துவர்.

### வட்டக்கச்சியில்

23-6-75 மாலை 6 மணிக்கு வட்டக்கச்சி சந்தை மைதானத்தில் சிறைமீண்ட தமிழ் இளைஞர்களுக்கும் தந்தை செல்வாவுக்கும் வரவேற்பு விழா நடைபெறும். இதிலும் கூட்டணித்தலைவர்களும் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் உரை நிகழ்த்துவர்.

தமிழர் கூட்டணி நடத்தும் ஏனைய கொள்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள் பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களில் நிகழும்.

21-6-75 — ஏழாலை மேற்கு

24-6-75 — ஏழாலை வடக்கு

25-6-75 — ஈச்சமோட்டை

28-6-75 — கோப்பாய்

## கரிகாலனின் தந்தையார் மறைவு!

தமிழர் கூட்டணியின்பேச்சாளர்களில் ஒருவரும் தமிழரசு இயக்கத்தின் பழம் பெரும் உறுப்பினருமான திரு. கரிகாலன் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. கந்தையா சரவணமுத்து கடந்த சனிக்கிழமை காலமானார். அன்னாரது ஈமச் சடங்குகள் 15-6-75 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன. நண்பர் கரிகாலனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆர்.

## முத்தமிழ் விழா!

அல்வாய் இளங்கோ மன்றம் 21-6-75 சனிக்கிழமை அல்வாயில் முத்தமிழ் விழா கொண்டாடுகிறது. "சிலம்பு செப்பும் செய்தி" என்ற விடயம் பற்றி ஈழவேந்தன் உரையாற்றுவார். கவியரங்கு, கருத்தரங்கு, பட்டிமன்றம் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறுகிறது.

## நற்பிட்டிமுனையில் தமிழ் இளைஞர் பேரவை கிளை!

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த நற்பிட்டிமுனைக் கிராமத்தில் 9-6-75 திங்கட்கிழமை செல்வன் இராபன்னீர்ச் செல்வத்தின் தலைமையில் இளைஞர் பேரவை ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆலோசகர்களாக சா. நாதபிள்ளை, க. மயில்வாகனம், ஆகியோரும் தலைவராக க. இராஜகுலேந்திரன் உபதலைவராக சு. குருகுலசிங்கம் செயலாளராக வே. சத்தியமூர்த்தி உபசெயலாளராக க. சந்திரசேகரம் பொருளாளராக கா. நாகராஜா ஆகியவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் ஒன்பது பேர் கொண்ட செயலவையும் தெரிவுசெய்யப்பட்டது.

## விஸ்வமடுவில் இளைஞர் பேரவை தொடக்கம்!

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் யூன் 21, 22-ம் திகதிகளில் நடைபெற உள்ள தந்தை செல்வாவுக்கும் சிறைமீண்ட இளைஞர்களுக்குமான வரவேற்பு நிகழ்ச்சி தொடரில் விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்திலும் இளைஞர் பேரவை அங்குரார்ப்பண கூட்டம் யூன் 22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற உள்ளது. இளைஞர் பேரவை புனரமைப்புக் குழுத்தலைவர் காசி ஆனந்தன், செயலாளர் மாவை சோ. சேனாதிராசா ஆகியோர் உட்பட தமிழர் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்த அங்குரார்ப்பண கூட்டத்திலும் முன்னோடியாக நடைபெறும் கருத்தரங்கிலும் கலந்து கொள்வார்கள்.

## பளையில் வண்ணை ஆனந்தனுக்கு வரவேற்பு!

சிறைமீண்ட வண்ணை ஆனந்தன் கடந்த 16-6-75 திங்கட்கிழமை பளைக்கு வந்திருந்தபோது தமிழர் கூட்டணிக் கிளைப்பணிமனைக்கு உணர்ச்சிமிக்க இளைஞர்களால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்.

## பரந்தனில் 'அம்பாள் கபே' திறப்புவிழா!

சிறைமீண்ட இளைஞர்களில் ஒருவரான திரு. மு. பாலரத்தினம் கடந்த 12-6-75ல் பரந்தன் நவீன சந்தையில் "அம்பாள் கபே" என்னும் உணவு விடுதியை திறந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழத் தமிழர்களுக்கு வாழ்வு பெற்றுக் கொடுத்திட தமிழகத்தார் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்!"

## உலகத் தமிழர் பேரவை தொடக்க விழாவில் டாக்டர் சாலை இளந்திரையன் வலியுறுத்து!



"ஈழத்தமிழர்களின் பிரச்சினை நமது இனத்தின் பொதுப் பிரச்சினை; நமது உயர் தனிச்செம் மொழியின் வாழ்வுப் பிரச்சினை; ஈழத்தமிழர்கள் ஆதரவும் அக்கரையும் அதிக அளவுக்குத் தருகின்ற தலைவர்கள், தொண்டர்கள் யார் என்பதை நானும் நீங்களும் நாட்டினரும் நன்கறிவோம். இப்பிரச்சினையை — தனி மனித இயக்க மூலமோ தனிக்கட்சிப் பிரச்சினையாகவோ அணுகாமல், தமிழர்கள், தமிழ் மொழி என்கின்ற பொது அடிப்படையில் தமிழர்களை தன்னகத்தே கொண்ட தமிழகக்கட்சிகள் அனைத்தும் ஒரு கூட்டமைப்பாக அணுகிடவேண்டும்!"

—இவ்வாறு சென்னையில் புதிதாக உருவாகியுள்ள உலகத் தமிழர் பாதுகாப்புப் பேரவையின் ஆரம்பக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் குறிப்பிட்டார்.

உலகத் தமிழர் உரிமைப் பாதுகாப்புபேரவை அமைப்பின் செயல்முறைகள் நோக்கங்கள் ஆகியவற்றினை விளக்கி பேரவை அமைப்பாளர் திரு. தமிழ் மன்னன் வரவேற்புரை நிகழ்த்திய பின்னர் திருமதி அமுதா ராகவன் தலைமை ஏற்றார்.

### அமுதா ராகவன் அழுதார்

இப்பேரவையின் தலைவியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள திருமதி அமுதாராகவன் ஈழத்தில் பிறந்தவராகையால், 1958ம் ஆண்டு ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலைகளைப் பற்றி பேசும் போதுதான் அழுததோடு வந்திருந்தோர் அனைவரையும் அழவைத்துவிட்டார்கள். தமிழினத்தினை அழித்திட முனைவோரை நாம் அழித்தொழிக்கவேண்டும். இன்றேல் தமிழினம் அழிந்துபடவேண்டும். சிங்களக்கொடுங்கோலர்கள் இனி தமிழினத்திற்கு கொடுமைகள் புரிந்தால் தாய்த் தமிழகம் பொறுக்காது, பொங்கி எழும் என்று பெரும் ஆரவாரத்திற்கிடையே கூறினார்.

### அருகோபாலன்

பேரவைச் செயலாளர் அருகோபாலன் உலக சரித்திரத்தை, உணர்ச்சியோடு, சரித்திர சான்றுகளோடு, தமிழனுக்கு பல்வேறு நாடுகளில், இழைக்கப்படும் இன்னல்களை— இடர்பாடுகளை— இடுக்கண்களை, களைந்தெறிய வேண்டும் என்று நீண்ட உரையாற்றினார்.

### தமிழ் மன்னன் உரை

பேரவைப்பொருளாளர் தமிழ் மன்னன் அவர்கள் உரையாற்றும் போது, தமிழனுக்கென்று ஒரு நாடு தேவை, அது ஈழத்தில் தேவை என்று சொன்ன போது உணர்ச்சிமிக்க கையொலி கிளம்பிற்று. ஈழத்தமிழக உரிமைப் போருக்கு, இப்பேரவை ஊக்கமும் அளிக்கும் உதவியும்செய்யும், விளக்கமும் தரும் விடுதலைப்போருக்கு வீரர்களையும் தரும். எங்கோ இருக்கின்றபங்களாதேசுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவியும் ஊக்கமுமளித்த நாம், நமது இரத்த பாச தொடர்புடைய ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டுவதை — கண்ணீர் சிந்துவதை, யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. என்று அவர் கூறியபோது மண்டபமே அதிர்ந்து விடுவது போல் கையொலி கிளம்பிற்று.

### டாக்டர் சின்னராசு

டாக்டர் எஸ். ஏ. சின்னராசு எம். எல். ஏ. உரையாற்றும் போது உலகில் எந்த மூலையில் கொடுமைகள் நிகழ்ந்தாலும், பாதிக்கப்பட்டோருக்குப் பரிவுகாட்டி, கொடுமைகள் இழைப்போரை கண்டித்து — முடிந்தால் தண்டித்து விடுவதே மனிதாபிமானமாகும். சிங்களப்பேடியர் நம்மின மக்களைகொடுமைப்படுத்தி அடிமையாக்குவதைக் கண்டித்து, நாம் மாத்திரமல்ல, இந்தியப் பேரரசு மட்டுமல்ல, உலகிலுள்ள அனைவரும் குரல் கொடுக்கும் வண்ணம் பாடுபடுவோம், பணியாற்றுவோமெனக்கூறினார்.

அடுத்து மணவைத்தம்பி அவர்கள் ஈழத்தில் நிகழ்ந்த நிகழ்கின்ற, நிலைகளை, உணர்வுகள் அலைமோதும் அளவிற்கு, ஈழத்தமிழக நிகழ்ச்சிகளை கோர்வைப்படுத்தி, ஈழத்தமிழன் எதிர்பார்க்கும், எழுச்சியும்—உணர்ச்சியும்—கிளர்ச்சியும் தேவை என்பதை விளக்கி உள்ளத்தைத்தொடும் உரையாற்றினார்.

அவரை அடுத்து இன எழுச்சிக் கவிஞர் குடியரசு அவர்கள் உரை நிகழ்த்துகையில், ஈழத்து தமிழனுக்கு இன்னல் நேர்ந்தால், இங்குள்ள தமிழன் இனி தூங்க மாட்டான், துடித்தெழுவான்; ஈழத்து சரித்திரத்தை எழுதிமுடிப்பான், இழி சிங்களவரின் இடுப்பின் எலும்பொடிப்பான் என்று கூறியதும் மண்டபத்தில் இடி விழுந்தாற்போல் கையொலி ஆரவாரம் கிளம்பிற்று.

### செல்வி சாந்தகுமாரி

கவிஞரை அடுத்து செல்வி த. சாந்தகுமாரி உரை நிகழ்த்துகையில் "தமிழ் மன்னன் அவர்கள் பேசும போது தந்தை செல்வாவின் சிறப்பு பற்றியும், தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் அயராத அரும்பணிகள் பற்றியும், ஈழத்துத் தாய்குலத்தின் தானைத்தலைவி திருமதி மங்கையர்க்கரசி அவர்களின் தூய நல்விடுதலைப் பணிகுறித்தும் தமிழின இளந்தலைவன் ஈழத்துக் கவியரசு காசிஆனந்தன் அவர்களின் வீர வரலாறுகளையும் சுதந்திரன் ஏட்டின் ஆசிரியர் கோவை-மகேசன் அவர்களின் [illegible] குறித்தும் [illegible] கும் மேலாக ஈழத்து இளம் வேங்கை, இமயப் புகழ் வேந்தன் சிவகுமாரன் களச்சாவு குறித்தும் உரையாற்றும் போது எனது உடம்பினுள் ஓடும் செந்நீர், கண்ணீராக மாறி தாரை, தாரையாகக் கொட்டிக் கொண்டே இருந்தது. அங்கே ஒரு மங்கையர்க்கரசி அம்மையார், தன் மானத் தமிழ்க் குலத்தை — தாய்க்குலத்தை, தட்டியெழுப்பி தமிழின விடுதலைக்குப் பாடுபடுகிறார் என்றால், அந்த மங்கையர்க்கரசி அம்மையாரின் மாணவியாகப் பணியாற்றி ஈழத் தமிழினத்தின்பால் எழுச்சி கொள்ள இங்குள்ள தாய்க்குலம் கிளர்ச்சி செய்திட— உணர்ச்சி பெற்று புரட்சி செய்திட நானும், பேரவைத் தலைவி அவர்களும் உழைப்போம் என கூறி முடித்தார்.

### டாக்டர் சாலை

இறுதியில் பேராசிரியர் சாலை இளந்திரையனார் அவர்கள் உரையின் சுருக்கம் வருமாறு :—

"செய்; அல்லது செத்து மடி. இதுவே நான் தரும் அறிவுரை. சொல்லைவிட செயல் அதிகம் தேவை. உலகிலுள்ள தமிழனுக்கு உரிமைகள் தேவை; அதைப் பெற்றுக்கொடுத்திட இங்குள்ளத் தமிழனுக்கு உணர்வுகள் தேவை. ஈழத்துத் தமிழன், இங்குள்ள தமிழர்களை மானமறவர்கள் என்று எண்ணுகின்றான், இங்கு நம்மில் சிலர் ஈனத் தமிழர்களாக — இனப்பற்றற்று, இழிந்த ஈனப்பிறவிகளாக, மொழிவெறி கூடாதென மொழிந்திடும் உமிழ்த்தக்க உளறுவாயர்களாக, தின்னுவது சாவது எனும் சிறு கொள்கையின் சொந்தக்காரர்களாக இருப்பதை இப்பேரவை மாற்றம் செய்திடல் வேண்டும்.

"ஈழத்துப்பிரச்சினை, நமது இனத்தின் பொதுப்பிரச்னை. நமது உயர் தனிச் செம் மொழியின் உயர்வுப் பிரச்னை. ஈழத்தமிழர்கள் பால் ஆதரவும் அக்கறையும் அதிக அளவிற்கு தருகின்ற தலைவர்கள், தொண்டர்கள் யார் என்பதினை நானும், நீங்களும், நாட்டினரும் நன்கறிவோம். இப்பிரச்சினையை தனி மனிதன் செயல் மூலமோ, ஒரேஒருகட்சியின்பிரச்சினையாகவோ அணுகாமல் தமிழர்கள்-தமிழ்மொழிஎன்கின்ற பொது அடிப்படையில், தமிழர்களை தன்னகத்தே கொண்ட தமிழகக் கட்சிகள் அணுகிட வேண்டுமென்கின்ற எனது அவாவை இங்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களை உள்ளடக்கி உருவாக்கப்படும் இப்பேரவை நல்ல முறையில் செயல்படுமென்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

"சட்டமன்ற உறுப்பினர் நண்பர் சின்னராசு அவர்களைப்போல் தமிழகத்[illegible] சட்டமன்ற உறுப்பினர்[illegible] மொழி—இன அடிப்படையில் முனைந்து நிற்கவேண்டும். நிற்பார்கள் என்றே நம்புகின்றேன். இப்பேரவைக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற வேண்டுமென கேட்டபோது திருமதி அமுதாராகனும், தமிழ் மன்னனும் பல்வேறு கட்சியினரைக்கொண்ட அமைப்பு இது என்று கூறினார்கள். தமிழர்கள் ஒன்றுவது சாத்தியமில்லையே என்று எண்ணிய எண்ணத்திற்கு மாறாக பல வேறு கட்சிகளைச்சார்ந்த— கருத்துகளையுடைய நண்பர்கள் உணர்வலைகள் மோதிட உறுதிமிக்க நிலையில், இனப் பற்றும், மொழி வெறியும் கொண்டு உரையாற்றினார்கள். இந்த உணர்வு மேலோங்கி, செயல்முறையாக 'செயலுருவம்' பெற வேண்டும். செந்தமிழினம், செழித்துவளர, ஆண்ட இனத்தால் மீண்டும் முறநுகை மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று என்று முரசறைய, இனிய தமிழ் மொழிக்கு மகுடம்சூட்டி மகிழ, தமிழனை தமிழ் மொழியைக்காட்டி தன்னுயர்வு தேடும் தருக்கர்களின செருக்கினை ஒழிக்க, இப் பேரவை செயல்பட வாழ்த்துகின்றேன்.

## இந்து இளைஞர் மாநாடு மொரிஷியஸ் பிரதமர் வாழ்த்து

இம்மாதம் 21, 22, 23ம் நாட்களில் மூதூரில் நடைபெறும் இந்து இளைஞர் பேரவையினர் தொழில் வாய்ப்பு மாநாட்டுக்கு வரும் பேராளர்கட்கும் மாற்றுப் பேராளர்கட்கும் தனது உளம் நிறைந்த வாழ்த்தைத் தெரிவிக்குமாறு மொரிஷியஸ் தீவின் பிரதம மந்திரி வாழ்த்துச்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்து மாசமுத்திரத்தில் உள்ள மொரிஷியஸ் தீவுகளில் இந்துக்களே பெரும்பான்மையாய் வாழ்கின்றார்கள். இவர்களுக்கும் இலங்கையில் உள்ள இந்து இளைஞர் பேரவைக்கும் நெருங்கிய கலாசாரத்தொடர்புகள் உண்டு. அண்மையில் நடைபெற்ற பொது நல அரசு பாராளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு மொரிஷியாவில் இருந்து வந்த பிரதிநிதிகட்கு இந்து இளைஞர் பேரவையினர்தேநீர்விருந்து வழங்கிக் கௌரவித்தனர்— மொரிஷியஸ், பிஜி, மலேஷியா, சிங்கப்பூர், கயானு, இந்தியா, நேபாளம், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்தும் வாழ்த்துச்செய்திகள் வந்துள்ளன. இந்நாடுகளில் உள்ள இந்து இளைஞர் மன்றங்களுடனும் பிற இந்து மதநிறுவனங்களுடனும் இந்து இளைஞர் [illegible] நீண்டகாலமாய்த் [illegible]ர்புகொண்டு வந்துள்ளது.

## கல்முனைப் பிரதேச தமிழ் இலக்கியக் கழகம்

மேற்படிகழகத்தின்ஆலோசனை- அங்குரார்ப்பணக் கூட்டம், 7-6-75 சனிக்கிழமை இரவு 7 மணியளவில் 'உதய கவி' அவர்களின் இல்லத்தில் கூட்டப்பட்டது. 'மருதூர் வாணன்' அவர்களின் தலைமையில் பின்வருவோர் நிர்வாகிகளாக தெரியப்பட்டனர்:- தலைவர்: கவிஞர் 'பாண்டியூரன்' இணைச்செயலாளர்: 'புரட்சிக்கவி, மருதூர் வாணன்' பொருளாளர்: 'உதய[illegible]த்தினம், உபசெயலாளர் கவி' உபதலைவர் 'ஜீவா-ஜீவ 'நீலாவணை தேவராஜ்'.

மறைந்த மாகவிஞர் 'நீலாவணன்' அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஒரு நிமிட மௌனஞ்சலியும், பிரார்த்தனையும் செய்யப்பட்டது.

மேற்படி கழகத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 21-6-75 சனிக்கிழமை பாண்டியூரன் இல்லத்துப் பலா முன்றலில் நடைபெறுகிறது. இதில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கறுப்பர்களுக்கு சிறிமாவோ கூறிய அறிவுரையை ஈழத்தமிழரும் பின்பற்றும்காலம் அதிக தூரத்திலில்லை!”

## அமிர்தகழியில் அமிர்தலிங்கம் முழக்கம்!

“ஜமேய்க்காவில் நடைபெற்ற பொது நல அரசுகளின் பிரதமர்கள் மாநாட்டில் அண்மையில் பேசிய பிரதமர் சிறிமாவோ அம்மையார் இனக்கொலையையும், இன ஒழிப்பையும் எதிர்த்து போராடி வரும் தென்னுபிரிக்க, ரொடீசிய கறுப்பர்களுக்கு நல்லுபதேசம் ஒன்று புரிந்திருக்கிறர். “நீங்கள் அமைதியான வழிகளில் உங்கள் உரிமைகளை நிலைநாட்ட எல்லா வழிகளிலும் முயற்சிசெய்து பாருங்கள்; அது முடியாவிட்டால் ஆயுதம் தூக்கிப்போராட உங்களுக்கு முழு உரிமையும் இருக்கிறது!” என்பதே அம்மையார் செய்த உபதேசமாகும். சிறிமா அம்மையார் கறுப்பர்களுக்கு காட்டியுள்ள வழி ஈழத்தமிழ் மக்களுக்கும் முற்றிலும் பொருந்தும் என்பதை அவர் உணரத்தவறிவிட்டார்! ஈழத் தமிழ் மக்களும் சமாதான வழிகளில் —அமைதியான முறையில் தங்கள் சுதந்திரத்தைப்பெற முயன்றுவருகின்றனர், இது முடியாத நிலையில் —பிரதமர் கறுப்பர்களுக்கு காட்டியுள்ள இரண்டாவது வழியைப் பற்றி ஈழத்தமிழ் மக்களும் சிந்திக்கவே செய்வர்!”

—இவ்வாறு அமிர்தகழி மட்டிக்களி கதிரொளி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற காசி ஆனந்தன் வரவேற்புக் கூட்டத்தில பேசிய தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் முழக்கமிட்டார்.

கவிஞர் காசிஆனந்தனின் பிறந்த ஊரான அமிர்தகழியில் 14-6-75 சனிக்கிழமை அவருக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு விழாவுக்கு திரு. வே. செல்லையா தலைமை தாங்கினுர். அமிர்தகழி, புன்னைச்சோலை மட்டிக்களி, பாலநதி மக்கள் சேர்ந்து இந்த விழாவை எடுத்தனர்.

கவிஞர் செ. குணரத்தினம் வரவேற்புரையை கவிதையிலே நிகழ்த்திஞர். அமிர்தகழியைச் சேர்ந்த மற்றோர் கவிஞரும் வரவேற்பு பாடல் இசைத்தார். ஆரைப்பற்றையை சேர்ந்த மோகனரங்கம் இசைமழை பொழிந்தார்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில் — சைபிரசில் வாழும் ஒரு லட்சம் துருக்கியர்கள் தனிநாடு அமைத்துவிட்ட போது 35 இலட்சம் ஈழத் தமிழர்கள் ஏன் தனிநாடு அமைக்க முடியாதென்று கேட்டார். தமிழ் ஈழ சுதந்திரக் கோரிக்கை இன்று சர்வதேச ரீதியில் முன்வைக்கப்பட்டு ஆதரவு திரட்டப்பட்டு வருவதை திரு. கோவை மகேசன் தமது பேச்சில் எடுத்துக்காட்டினுர்.

ஈழவேந்தன் பேசுகையில் —தமிழ் மக்கள் விழித்தெழுந்து தங்கள் உரிமைக்குப் போராடாவிட்டால், ஆராரோ ஆரிரரோ என்று பாடுவதற்குப்பதில் ‘தொய்யப்போ, தொய்யப்போ’, என்று சிங்களத்தில் பாடும் நிலை ஏற்படுமென்றும், ஆலயங்களில் தேவார திருவாசகங்கள் மறைந்து “புத்தம் சரணம் கச்சாமி” புகுந்துவிடுமென்றும் எச்சரித்தார்.

திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. பேசுகையில்—தமிழ் மக்கள் மத்தியில் பிரதேசப் பிரிவினைக்கு துளியும் இடமில்லையென்று கூறி— மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதியின் யாழ் துவேஷ பிரசாரத்தை கிழித்தெறிந்து அவரது சுயரூபத்தை அம்பலப்படுத்திய போது மக்கள் ஆரவாரத்துடன் கையொலி யெழுப்பினர்.

கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில் — தமிழ் ஈழம் பிரிந்தால், பொருளாதார நிறைவுபெற்று தலை நிமிர்ந்து வாழமுடியும் என்பதை புள்ளிவிபரத்துடன் விளக்கினுர்.

தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு. எஸ். கே. மகேந்திரன், செல்வன் பன்னீர்செல்வம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். பெருந்திரளானேர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

## 12 அம்சத்திட்டம் ஒருமுறைக்கு இருமுறை ‘படுகொலை’ செய்யப்பட்ட....

—6-ம் பக்கத் தொடர்

நான்காவது அம்சம் வருமாறு: சிங்களம் அரச கருமமொழி என்ற சட்டத்தை தமிழ் மக்களுக்கு பாதகமில்லாத விதத்தில் நேர்மையாக அமுல்படுத்துவதுடன் மொழிச் சட்டத்தை அமுல்படுத்தும் போது அரசாங்க ஊழியர்களுக்கும், பொது மக்களுக்கும் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் அசௌகரியங்களையும் முடிந்த அளவில் குறைக்க உசிதமானவற்றை செய்வது”.

6 வது அம்சத்தில் உள்ள “அவ்வப்பகுதி மக்கள் தமது பகுதிகளில் விவகாரங்களை செயல்படுத்துவதற்கான உகந்த நிர்வாக அமைப்புகளை உருவாக்குவது” பற்றிய அதிமுக்கிய வாக்குறுதி சூரியாராச்சியினுல் நீக்கப்பட்டது. பல்லு கழட்டப்பட்ட 6வது அம்சம் வருமாறு: “மக்கள் தமது விவகாரங்களை நிர்வகிக்க வசதி அளிப்பது என்ற ஜனநாயக கோட்பாட்டை செயல்படுத்த போதுமான நிர்வாக அமைப்பை உருவாக்கவும் ஸ்தலஸ்தாபனங்களின் செயற்திட்டத்தையும், அதிகாரங்களையும் விஸ்தரிப்பதும்.”

எட்டாவது, ஒன்பதாவது அம்சங்கள் அடியோடு விழுங்கப்பட்டன. அவைக்குப் பதிலாக புதியதொரு எட்டாது அம்சம் சேர்க்கப்பட்டது: “உயர் கல்விக்கும் விசேஷ கல்விக்கும் உரிய வசதிகளை விஸ்தரிப்பதன் மூலம், உயர்கல்வித்துறையில் சகல குழந்தைகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் நியாயமான கொள்கையை உறுதிப்படுத்துவது.”

### சமாதி!

தமிழ் பிள்ளைகளின் போதனமொழி தமிழாகவே இருக்கவேண்டும் என்ற மீற முடியாத உரிமைக்கும், உயர்கல்வி வாய்ப்புக்கள் தரப்படுத்தல் அடிப்படையில் அமையக்கூடாது என்ற கோரிக்கைக்கும் கிழக்கு மாகாண வளாகத்திற்கும் இப்புதிய 8வது அம்சம் சமாதி வைத்துவிட்டது.

மலையக தமிழ் மக்களைப் பற்றி முதல் முறையாக ஞாபகம் வந்து புதியதொரு 9வது அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது: “சிறிமா—சாஸ்திரி திட்டத்தை மனிதாபிமான ரீதியில் அமுல் நடத்துவதை விரைவு படுத்தவும், மலையக தொழிலாளர்களை ‘தேசிய வாழ்வுடன் சங்கமப்படுத்தும் வழிமுறைகளை விரைவு படுத்தவும், இப்பிரிவு மக்கள் இப்போது முகம் கொடுக்கின்ற சில இன்னல்களை அகற்றவும்.”

10வது அம்சத் திட்டத்தில்: “தமிழ் மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும், கலாசாரத்தையும் வளர்க்க அனைத்து உறுதிகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குவது” என்ற வாக்குறுதி “தமிழ் மக்களின்” என்ற வார்த்தைகள் வெட்டப்பட்டு “சகல மக்களினதும்” என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### இலங்கரத்தினவிடம் மண்டியிட்டனர்!

முற்போக்குகளின் பூரண சம்மதத்துடன் சூரியாராச்சியினு பின்னப் படுத்திய 12 அம்ச திட்டத்தின் கதியை மேலே பார்த்தோம்.

ஆனுல் முற்போக்குகள் தமிழரின் உரிமைகளை எவ்வளவு தூரம் பலிகொடுத்தும் சிங்கள பாஸிஸ்ட்டுகளின் இரத்தப்பசி அடங்கவில்லை. துகில் உரியப்பட்ட இந்த 12 அம்ச திட்டத்தை தானும் மகா நாட்டில் வந்து கைநீட்டி வாங்க சிறிமா அம்மையார் இறுதி நேரத்தில் மறுத்துவிட்டதாக தெரிகிறது.

இதையடுத்து ஒருமைப்பாடுமகாநாட்டினர் அமைச்சர் இலங்கரத்னவின் காலில் விழுந்து எப்படியாவது தங்கள் மானத்தை காப்பாற்றுமாறு மன்றுடினராம். சூரியாராச்சி சீர்குலைத்த தமிழ் அன்னையின் உரிமைகளை இலங்கரத்னவின் காலில் வைத்து இதற்கு என்ன வேண்டுமென்றுலும் செய்யுங்கள், எங்களுக்கு சிறிமா அம்மையாரே கதிமோட்சம், அவர் வந்தால் போதும் என்று கெஞ்சினராம்.

இதன் விளைவாக 12 அம்சத் திட்டம் முற்போக்குகளின் ஆதரவுடன் மறுபடியும் மூர்க்கத்தனமான பலாத்காரத்துக்கு ஆளானது.

இரண்டாவது, மூன்றுவது அம்சங்களில் “இரு பகுதியினரும்” என்று சிங்கள, தமிழ் மக்களை குறிப்பிட்டு சொல்லும் வார்த்தைகளை வெட்டிவிட்டு அவற்றிற்குப் பதிலாக “அனைவரும்” என்ற பொதுவான பதம் சேர்க்கப்பட்டது.

நான்காவது அம்சத்தின் முதற் பகுதி பின்வருமாறு மாற்றப்பட்டது. “மொழிப் பிரச்சினைக்கான நியாயமான ஒரு தீர்வாக சிங்களம் மட்டும் சட்டத்தையும், தமிழ் மொழி (விசேஷ விதிகள்) சட்டத்தையும் அனைவரும் ஏற்றுக்கொள்வது.”

ஐந்தாவது அம்சம் பின்வருமாறு புது உருவம் பெற்றது. “அரசாங்கத்துடனும், அரசாங்க அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள், பொலிஸ் நிலையங்கள் முதலான வற்றுடனும் சிங்கள, தமிழ் பேசும் மக்கள் தமது அலுவல்களை ஆற்றுவதற்கு உள்ள உரிமையை நடைமுறையில் சாத்தியப்படுத்துவது.”

முற்போக்குகளின் ஒரிஜினல் 5வது அம்சத்தின்படி தமிழ் மக்கள் இந்த நிறுவனங்களுடன் தமது அலுவல்களை தமது மொழியிலேயே ஆற்றுவதற்கு வழங்கப்பட்ட நடைமுறை உத்தரவாதத்தை இலங்கரத்தின மீளத் தயாரித்த 5வது அம்சம் விழுங்கி விட்டதை கவனிக்கவும். தமிழ் மக்கள் எந்த மொழியில் இந்நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வது என்பது வரையறுக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. இது துரோகத்தனமான ஒரு வெட்டு ஆகும்.

### கழுதை தேய்ந்து கட்டெறும்பானது!

6வது அம்சம் பின்வருமாறு சிதைக்கப்பட்டது: “மக்கள் தமது விவகாரங்களை நிர்வகிக்க வசதி அளிப்பது என்ற ஜனநாயக கோட்பாட்டை செயல்படுத்த [illegible] வசதி) செய்தல்.” ஸ்தலஸ்தாபனங்களின் செயற்திட்டத்தையும் அதிகாரங்களையும் விஸ்தரிப்பது பற்றிய சூரியாராச்சி திட்ட வாக்குறுதி இலங்கரத்தின திட்டத்தில் பஸ்மீகரம் ஆனதை கவனிக்கவும். தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு பிரதேச சுயாட்சி வழங்கக்கூடிய இந்த அம்சம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக அடியோடு சூறையாடப்பட்ட விதத்தை கவனிக்கவும்.

8வது அம்சம் ஆரம்ப எடுபிடி, தடல்புடல்கள் எல்லாம் ஒய்ந்து மடிந்து இறுதியில் பின்வருமாறு மாறியது: “உயர், விசேஷ கல்வி பெறுவதற்கு அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் நியாயமான வாய்ப்பு அளிப்பது.”

சூரியாராச்சி திட்டத்தில் 8வது அம்சத்தில் புகுத்தப்பட்ட ‘சமவாய்ப்பு’ என்ற வார்த்தைக்கு சமாதி வைத்து, “நியாயமான வாய்ப்பு” என்ற பிச்சை வழங்கப்பட்டுள்ளது

9வது அம்சம் சூரியாராச்சி திட்டத்திலுள்ள சிறிமா—சாஸ்திரி திட்டத்தை “மனிதாபிமான ரீதியில்” அமுல் படுத்துவது என்ற பதப்பிரயோகத்தை கைவிட்டுவிட்டது. சிறிமா — சாஸ்திரி திட்டம் மிருகத்தனமான ரீதியில் அமுல் நடத்தப்படும் என்பதற்கான அபாய அறிவிப்பா இது? மேலும், “மலையக மக்கள் இப்போது முகம் கொடுக்கின்ற சில இன்னல்கள் அகற்றப்படும்” என்று வாக்குறுதியும் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

முற்போக்குகளின் ஒரிஜினல் 11வது அம்சத்தில் “தமிழ் மக்களின் நலன்களோடு சம்பந்தப்பட்ட அமைப்புகளில் தமிழ் மக்களுக்கு உரிய இடம் அளிக்கப்படுவதை உத்தரவாதப் படுத்துதல்” என்ற வாக்குறுதியும் இலங்கரத்தினவால் முற்றாக அகற்றப்பட்டது.

### தமிழ்ப் பத்திரிகைகள் இருட்டடிப்பு!

இலங்கரத்தின இந்த முற்போக்குகளின் ஆதரவுடன் சின்னு பின்னுப்படுத்திய 12 அம்சத் திட்டம் ஏரிக்கரையின் சிங்கள கஸட்டான “தினமின”வில் மாத்திரமே (28-5-75-ல்) பிரசுரிக்கப்பட்டிருந்தது. தமிழ் பேசும் மக்களின் கொஞ்ச நஞ்ச உரிமைகளும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் இலங்கரத்தினவுக்கு விலை பேசி விற்ற இந்த நாசகார திட்டத்தையோ, அல்லது அதற்கு மூன் சூரியாராச்சி சிதைத்த திட்டத்தையோ எந்த ஒரு தமிழ் பத்திரிகைக்கும் வெளியிடாது வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்தனர்.

இந்த முற்போக்கு எழுத்தாளர் சங்க புல்லுருவிகள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை இவ்வாறு விற்ற பச்சைத் துரோகத்தை சிறிமா அம்மையாருக்கு எடுத்துக்கூறி அமைச்சர்கள் இலங்கரத்தின, குமாரசூரியர், பீட்டர்கெனமன் வேண்டிக்கொண்டதன் பேரில், தமிழினத்தின் முதுகில் குத்திய நீசத்தனத்திற்கு, துரோகத்திற்கு பரிசாக சிறிமா அம்மையார் மகாநாட்டிற்கு எழுந்தருளி, அங்கிருந்த எட்டப்பர்கள் காக்கை வன்னியர்களின் மனத்தை குளிர வைத்தாராம்.

### இவர்களுக்கு என்ன உரிமை?

தமிழ் மக்கள் இன்று உள்ளம் குமுறி, இரத்தம் கொதித்து கேட்கும் கேள்வி ஒன்றேதான்—தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பற்றி பாத்தியதை கொண்டாடவும், தரகு வியாபாரம் நடத்தவும் முற்போக்குகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் இந்த புல்லுருவிகளுக்கு உரிமை அளித்தது யார்? தமிழ் பேசும் மக்களால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்ட தலைவர்கள் இருக்கையில் தமிழ் உரிமை பற்றி மகாநாடு நடாத்த இந்த ஈனப்பிறவிகளுக்கு ஏது உரிமை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியறிவிப்பு

14.6.1975 (சனிக்கிழமை) எமது அன்புத் தந்தை கந்தையா சரவணமுத்து அவர்கள் மறைந்ததையொட்டி, 15.6.75 (ஞாயிறு) நடந்த இறுதிச் சடங்கின்போது வருகை தந்தும் இரங்கற் செய்திகள் அனுப்பியும் எம் இழப்பிற் பங்குகொண்ட இயக்கத் தலைவர்கள், சட்டக் கல்லூரி நண்பர்கள், உற்றூர் உறவினர் அனைவருக்கும் நன்றியுடையேன்.

77, பாரதி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

—கரிகாலன்


- தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக் குரலாக!
- தங்கத் தமிழகம் காணத் துடிக்கும் இலட்சிய முழக்கமாக!

மீண்டும் வெளிவருகிறது

**தாயகம்**

ஆசிரியர்:- பூ. ம. செல்லத்துரை

நாடு பூராவும் முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

விபரங்கட்கு:- ஆசிரியர், தாயகம், பெரிய போரதீவு (கி. மா.)



**வெளிவந்துவிட்டது விற்பனையாகிறது!**

சுதந்திரன் வெளியீட்டகத்தின் 4வது வெளியீடு!

ஈழவேந்தன் எழுதிய

**"தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம்!"**

தொடர்பு கொள்க:— விலை ரூபா 1-00

சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு-12.



**யோகக் கலை**

"சளைக்காது, அதிக வேலை, அதிகப் படிப்பு, அதிக சிந்தனை செய்ய உதவுகிறது."
—யோகாசனப் பயிற்சி.

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி "யோகக்கலை" என்ற சிறந்த புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**
த. பெ. எண் 77. யாழ்ப்பாணம்.



நொறிஸ் வீதி (ஓல்கொட் மாவத்தை)யில் சுதந்திரன் விற்பனையாளர்கள்

இராஜேஸ்வரி கொட்டேல்,
69, நொறிஸ் வீதி,
கொழும்பு-11.

லீலா ஸ்ரோர்ஸ்,
249, நொறிஸ் வீதி,
கொழும்பு-11.



**சுடர்**

ஆனி இதழ்

- முத்தான கதைகளுடன்-
- சத்தான கட்டுரைகளுடன்-
- தித்திக்கும் அம்சங்களுடன்-
- திகட்டாத அறிவுப் பேழையாக-

இப்பொழுது தயாராகிறது!

ஏமாற்றத்தைத் தவிர்க்க உங்கள் பிரதிக்கு இப்போதே விற்பனை முகவரிடம் பதிவுசெய்து கொள்ளுங்கள்!



**கெபிட்டல்**

9-வது வாரம்



சிவகுமார், விஜயகுமார், கே. ஏ. தங்கவேலு, வீரராகவன், ஜெயசித்திரா, விதுபாலா, மனோரமா ஆகியோர் நடித்த

**பொண்ணுக்கு தங்க மனசு**

டைரக்ஷன்: தேவராஜ்—மோகன்.

**செல்லமகாலில் 10-வது ஜனத்திரள் வாரம்**

நடிகர்கள்:
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
நாகேஷ் - அசோகன் - சுந்தரராஜன்,
தேங்காய் சீனிவாசன் - எஸ். வி. ராமதாஸ்,
வி. கோபாலகிருஷ்ணன்-ஜெஸ்டின்-சாண்டோ,
எம். எம். ஏ. சின்னப்பா தேவர்.

நடிகைகள்:
கே. ஆர். விஜயா,
குமாரி சச்சு - ராதிகா - கோவை காமாட்சி
இந்திரா மற்றும் தேவர் பிலிம்ஸ் குழுவினர்.

டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்
தேவர் பிலிம்ஸ்

**நல்ல நேரம்**

(ஈஸ்ட்மென் கலர்)





**11வது வாரம்**

**கிங்ஸ்லி—வெலிங்டன்**

**விஜயா** (மட்டு நகர்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், உஷா நந்தினி ஸ்ரீகாந்த், ஜெயா,
—நடித்த—

குகநாதனின்

**ராஜபார்ட் ரங்கதுரை**

(ஈஸ்ட்மென் கலர்)

**இப்பொழுது 2-வது வாரம்**

**பிளாஸா**

சிவாஜி — மஞ்சுளா — மனோகர்
—நடித்த—

**எங்கள் தங்க ராஜா**

(ஈஸ்ட்மென் கலர்)

**கெப்பிட்டல்**

- ரவிச்சந்திரன்
- விஜயலக்ஷ்மி
- மனோகர்
- மணிமாலா

நடித்த

**எதிரிகள் ஜாக்கிரதை**


இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக வீதி 194 ஏ. இலக்கத்தில 1975ம் வருடம் ஜூன் மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org